20 காசு

காஞ்சி

4-5-69 நிறுவனர்: அண்ணாதுரை

5.42

4.5.69.

தமிழக சட்டமன்ற பேரவைத் துணைத்தலைவர் திரு எட்மெண்ட் பர்னெண்டஸ் அவர்கள்

கேட்டீரா சேதி!

மத்திய அரசு, அண்மையில் விதித்த புதிய வரி இனங்களில் விவசாயத்துக்குப் பயன்படும் பம்ப் செட்டுகள்மீது தீர்வையும், ரசாயன உரங்கள்மீது வரியும் விதித்திருந்தது. இது பெரும் அளவுக்கு விவசாய உற்பத்தியைப் பாதிக்கும் என்ற பரவலான எதிர்ப்புக் கிளம்பியதனால் இப்போது பம்ப் செட் மீதான தீர்வையை மட்டும் கைவிட்டுவிட்டிருக்கிறார் நிதி அமைச்சர்! விவசாயத் தொழில் பாதி கிணறு தாண்டிய மாதிரிதானே!

* * *

பரீதாபாத் மாநாட்டுக்குச் சென்று திரும்பி இருக்கும் தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் சுப்பிரமணியம், தமிழ் நாட்டு நகராட்சித் தேர்தல்கள்பற்றி ஆழ்ந்து கவனிக்கப் போவதாகவும், ஆனால் பெரும்பான்மை வெற்றி பெற்றுள்ள தி. மு. க.-வைப் பாராட்டுவதாகவும் செய்தியாளர்களிடையே குறிப்பிட்டிருக்கிறார். சுப்பிரமணியனாராலும் இப்படி ஒரு பாராட்டைத் தர முடிகிறதென்றால் அதுவும் ஒரு செய்திதான்!

* * *

தியாகிகள் என்ற சொல்லை உச்சரிக்கும்போதே காங்கிரஸ் என்ற நிறுவனமும் கூடவே நினைவுக்கு வந்துவிடும் ஒரு காலத்தில்! தியாகிகளின் கூடாரமாக விருந்த காங்கிரஸ் இன்று சீரழிந்து போய்க்கொண்டிருப்பதற்குக் காரணமே அது ரௌடிகளின் முகாமாகி விட்டதுதான் என்று உண்மையான காங்கிரசுக்காரர்களேகூட குறைபட்டுக் கொள்கிறார்கள். தமிழ் நாட்டுக் காங்கிரஸ் எவ்வளவு கீழ்த்தரமான முறையில் தன்னை ஆளாக்கிக் கொளள முடியுமோ அவ்வளவு கீழ்த்தரமாக நடக்கத் தொடங்கி விட்டது என்பதை நிருபிக்கக் கூடியதுதான் சென்னை மாநகராட்சி மன்றத்துக்குள்ளே அடிதடியில் இறங்கி இருப்பதாகும். உண்மையான காங்கிரசுக்காரர்கள் யாராவது அந்த முகாமில் எஞ்சியிருந்தால் தலைகுனிந்து கொள்ளவேண்டும். செய்தியைக் கேட்டு, இதற்கொரு முக்காட்டு ஊர்வலம்கூட நடத்தலாம்!

* * *

எத்தனை எத்தனையோ கண்டங்களிலிருந்து தப்பிக்கொண்ட பிரஞ்சு அதிபர் டிகால், மக்கள் தீர்ப்பிலிருந்து தப்பிக்கொள்ள முடியவில்லை. தேசமே ஸ்தம்பித்து ஏதொன்றும் நடைபெறவே முடியாத நிலை யேற்பட்டபோதுகூட, சாமர்த்தியமாகச் சமாளித்துவிட்டார்! என்றாலும் தம் அரசுக் கொள்கைமீது நம்பிக்கைக் கேட்டு நடத்திய பொதுவாக்கெடுப்பின் முடிவு தனக்கு எதிராக இருக்கக் கூடும் என்று அவர் நினைத்திருக்க முடியாதுதான். ஆயினும் மக்கள் தீர்ப்புக்குத் தலைவணங்கி உடனேயே பதவி விலகிவிட்டதற்குக் காரணம், அவருக்கு இந்த நாட்டுக் காங்கிரஸ் கட்சியினரைப் பற்றிச் சரியாகத் தெரியாததுதான் என்றால் சிரிக்கக்கூடாது.

* * *

தீண்டாமையை ஒழித்துக்கட்டுவதில் மத்திய அரசு அக்கறையும் கடமையும் கொண்டிருக்கிறது என்பது உண்மையானால், தீண்டாமை இருக்கவேண்டும் என்ற பொருளில் பேசிவிட்டு, இப்போது சமாதானங்கள் வேறு சொல்லத் தொடங்கியிருக்கும் பூரி சங்கராச்சாரியாரை இன்னமும் ஏன் வெளியே விட்டு வைத்திருக்கிறார்கள் என்று யாரும் வினா தொடுக்கக்கூடாது. தொடுத்தாலும் விடை தரப்படமாட்டாது. ஏனென்றால் இது மதச்சார்பற்ற நாடு—மதச்சார்பற்ற அரசு!

* * *

மதுவிலக்குப் பிரச்னை தமிழகத்துக்கு மட்டும்தான் ஒரு கேள்விக் குறியாக இருக்கிறதென்றால், மதுவிலக்குத் திட்டமே, மத்திய அரசுக்கு இப்போது கேள்விக்குறியாக இருப்பதாகத் தெரிகிறது. மதுவிலக்குத் திட்டத்தை மாநிலங்களின்மீது கட்டாயமாகத் திணிக்க முடியாது என்று மத்திய சட்ட மந்திரி கோவிந்தமேனன் கூறுகிறார். அதே வேளையில் அவர் சார்ந்துள்ள அரசுக்கட்சி, இன்னும் 5 ஆண்டுக் காலத்தில் படிப்படியாகச் செயல்படுத்த வேண்டும் என்று ஒரு தீர்மானமேபோட்டுவைத்துக்கொண்டு தூங்கிக்கொண்டிருக்கிறது. காந்தியடிகளின் நூற்றாண்டு விழா ஆண்டிலேயே இப்படிப்பட்ட கருத்துக்கள் பரிமாறப்படுகின்றன என்றால், அடுத்த ஆண்டு முதல், வினாக் குறிகள் விடைக் குறிகளாக ஆகி விடாதா என்று மக்கள் நினைப்பது இயற்கையே யல்லவா!

* * *

பெங்களூர் நகரம், எத்தனையோ விதத்தில் தனிச்சிறப்புடையதாகும். வந்தாரையும், போனாரையும் வாழ வைப்பதில் அதற்கு நிகர் அதுவேதான்! மக்களை "மகிழ்ச்சி"யாக இருக்கச் செய்வதில் எந்தப் பெரு நகரையும்விட, பெங்களூர் எப்போதுமே முன்னணியில் இருப்பதாகும்! இப்போது, அந்த மாநில முதலமைச்சர் ஒரு 'இரவு விடுதி"யையும் திறந்து வைத்து "இதுபோன்ற இரவு விடுதிகளுக்கு நான் எப்போதும் விரோதியல்ல — இயன்றவரை ஆதரவும் தருவேன்" என்றும் பேசி இருக்கிறார். பகலெல்லாம் கடுமையாக உழைத்துவிட்டு ஓய்வாகப் பொழுதுபோக்க வருபவர்களுக்கு மகிழ்ச்சியும் உற்சாகமும் ஊட்ட வேண்டும். இல்லையென்றால் அவர்களுக்கு வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டுவிடும் என்பது அவரது பிரதான கருத்து. எனவேதான் வாழ்க்கையில் வெறுப்பு ஏற்படாதிருக்கச் செய்யும் இரவு விடுதிகளை அவர் திறந்து வைக்கவும், மேலும் பல திறக்கச் செய்யவும் முன்வந்திருக்கிறார். இரவு விடுதிகள் நாடெங்கும் பரவலாக ஏற்பட, மைசூர் முதலமைச்சர் துணை புரிவாரானால், பல பேர்களுடைய பலவித பிரச்னைகள் முற்றுப்பெறும், அந்த நாளும் வருமா? ஆதவனும் உதிப்பானா?

விற்பனையாளர் தேவை!

"காஞ்சி" இதழை விற்பனை செய்ய, கீழ்க்கண்ட ஊர்களுக்கு விற்பனையாளர்கள் தேவை. முன்பணம் கட்டக்கூடியவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

1. ஆற்காடு
2. திருவண்ணாமலை
3. வேலூர்
4. வள்ளியூர்
5. தேவக்கோட்டை

விவரங்களுக்கு:

உரிமையாளர்.
'காஞ்சி.'
காஞ்சிபுரம்-3

காஞ்சி
நிறுவனர்: அண்ணாதுரை

மலர் 5 | 4—5—69 | இதழ் 42

மேநாள் - சிந்தனைகள்!

1886ம் ஆண்டு மே திங்கள் முதல்நாள் சிகாகோ நகரில் உழைக்கும் வர்க்கத்தினரின் உரிமை கேட்டு, போர்க்குரல் பொதிய எழுப்பப்பட்ட உரிமை முழக்கம் தான் 'உலகப் பாட்டாளி வர்க்கமே ஒன்றுபடு' என்பதாகும். இது 1889 முதல் புதுப்பொலிவோடு உலகம் முழுமையுமுள்ள உழைக்கும் வர்க்கத்தின் குரலாக ஓங்கி வளர்ந்து, இன்றளவும் இளமையோடு இருக்கிறதென்றால், அதன் பின்னேயுள்ள பின்னணி, தொழில், தொழிலாளர் பின்னேதான் உலகம் என்பதை நிரூபிக்கக் கூடியதாகும்.

ஒரு குறிப்பிட்ட சில அச்சுத் தொழிலாளரின் உரிமைக்காக—எட்டு மணி நேரம் மட்டுமே உழைக்க அனுமதிக்கவேண்டும் என்ற அடிப்படையில் எழுந்த இந்த போர் முழக்கம், பல கட்டங்களையும் கடந்து தொழிலாளர் வர்க்கத்தின் குறை பல தீர்த்து, எதிர் காலத்திலும் தீர்த்து வைக்கக்கூடிய இனிய கீதமாக இயங்கிக் கொண்டிருக்கிறதென்றால், தொழிலாளர் வர்க்கத்தையும், ஏழைப் பாட்டாளி, விவசாயிகளையும் எந்தவொரு நாடும், எந்தவொரு அரசும் புறக்கணித்து விட்டு, நடைபோட முடியாது என்பதை நிரூபித்துக் கொண்டிருக்கிறதனால்தான் என்பதை இன்றைய உலகம் ஒப்புக்கொண்டிருக்கிறது.

கடந்த எண்பதாண்டுக்காலத்தில் ஒவ்வொரு ஆண்டும் மே திங்கள் முதல் நாளன்று தொழிலாளர் இனம் ஒன்றுகூடி தன் குரலை உரத்துக் கூவிக்காட்டிய தோடன்றி, முந்தைய ஆண்டிலிருந்து அந்த நாள் வரையில் தம் இயக்கம் கண்ட வெற்றித் தோல்விகளையும், நல்லவை—அல்லவைகளையும், இலாபம்–இழப்புக்களையும் கணக்குப் பார்த்து, கூட்டிக் கழித்து தவறுகள் செய்திருந்தால் திருத்திக்கொள்ளவும், சோம்பி இருந்திருந்தால் சுறுசுறுப்படையவும், செய்ய வேண்டுவன வற்றை செய்யாது விட்டிருந்தால் செய்து முடிக்கவுமான கணக்குப் பார்த்துச் செயல் பட்டிருக்கிறது என்பதிலிருந்து, இந்நந்நாளை, "தொழிலாளர் வர்க்கம் கணக்குப் பார்க்கும் நாளாகவே கொண்டிருக்கிறது என்றால் தவறிருக்கமுடியாது.

கடந்து வந்த பாதையினைத் திரும்பிப் பார்த்து, இனி கடக்கவேண்டியிருக்கும் தூரத்தைக் கணித்துக் கொண்டு, களைப்பாறிச் செல்வதென்பது வரவேற்கப்பட வேண்டியதேயாகும். அந்த வகையில் பயன்படும் மே நாள் விழா, இந்த திங்கள் முதல்நாள் உலகத்தின் பல்வேறு நாடுகளிலும் கோலாகலமாகக் கொண்டாடப் பட்டிருக்கிறது.

உலகப் பாட்டாளி மக்களே! ஒன்றுபடுங்கள்! என்ற இன்னிசை, துரதிருஷ்டவசமாக இந்த நாட்டில் பொதுவுடைமைக்காரர்களுக்கு மட்டுமே சொந்தம் என்ற முறையில் கடந்த காலத்திலே இருந்துவந்திருக்கிறது.

அதாவது தொழிலாளர்களது நலம் பேணக்கூடியவர்கள்—அவர்களது குறை கேட்டுத் தீர்க்கக்கூடியவர்கள் பொதுவுடைமைக்காரர்கள் மட்டுமே என்ற எண்ணம் சரியாகவோ, தவறாகவோ பரப்பப்பட்டு வந்ததனாலேதான் இந்த நிலை முகிழ்த்திருக்க வேண்டும்.

'ஏர்ப் பின்னது உலகம்' என்பது தமிழ் வாக்கு. ஏர் இயங்கினால்தான் பிற அனைத்து உயிரும் இயங்க முடியும் என்ற கருத்தினை அடிப்படையாய்க் கொண்டது இது. இதுபோல்தான் தொழில்கள் இயங்கினால் தான் மற்றைய அனைத்தும் இயங்க முடியும் என்ற நிலை பிறந்துவிட்ட புதுமை யுகம் இது.

தடையற்ற முறையில் தொழில் துறை வளர்ந்து தழைக்க வேண்டுமானால், அதன் உயிராய் மூச்சாய் இருந்துவரும் தொழிலாளர்களும் புறக்கணிக்கப்படக் கூடாது என்பது உண்மையாக இருந்து தீரவேண்டும்.

தொழிலாளர்களது பிரச்னையை இந்த நாட்டில் பொதுவுடைமையினர் தொட்டுக் கொண்டதனால் தானோ என்னவோ, கடந்த பல ஆண்டுகளாக தொழிலதிபர்களுக்கும்-தொழிலாளர்களுக்கும் இடையே சுமுக உறவு ஏற்படாமற்போய்விட்டிருக்கிறது. எனினும்பொதுவுடைமைக்காரர்களுக்குத் தொழிலாளர்கள் மீதான அக்கறை குறைவு என்று கூறிவிட முடியாது. ஆனால் தொழிலதிபர்களது போக்கிலிருந்து நியாயமான குறைகளையவேண்டிய குறை என்பவற்றைக்கூட பொதுவுடைமையர்களின்மேல் பழியைப் போட்டு விட்டு வாளாவிருந்து விடுகிறார்கள்.

வருந்தத்தக்க — கண்டிக்கத்தக்க இப்போக்கு முறியடிக்கப்பட்டாகவேண்டும். அதேபோது பாட்டாளி, தொழிலாளர் வர்க்கம் என்பது அனைவருக்கும் சொந்தமான—அனைவரையும் வாழச் செய்யும் இனம் என்ற முறையில் ஆக்கங்காண முற்படவேண்டும்.

நம் நாட்டைப் பொறுத்த மட்டில் அரசியல் காரணங்களுக்காகக்கூட தொழிலாளர்களது உணர்ச்சி தூண்டிவிடப்பட்டு "வேலை நிறுத்தம்" வரையிலேகூட வந்து விடுகிற அவலம் அடிக்கடி நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

அரசியல் கலப்பற்ற முறையில் தொழிலாளர்களது பிரச்னைகள் அணுகப்பட்டிருந்தால் பல தீர்வுகள் ஏற்பட்டிருக்கக்கூடுமோ என்றுகூட எண்ணிப்பார்க்கும் அளவுக்கு நிலைமைகள் முற்றி வந்துள்ளன.

தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்! என்ற குரலில் எப்படி எத்தகைய அரசியலும் கலந்திருக்கக் காண முடியவில்லையோ, அதுபோலவே தொழிலாளர்களது பிரச்னையென்கிற போதில்—அதில் எந்தவொரு அரசியலும் இல்லையென்கிற அடிப்படையிலான நிலை உருவாக்கப்பட வேண்டும்.

தொழிலாளர் வாழ்க! என்ற குரலை ஒட்டியே தொழில் துறை வளர்க! என்ற குரலும் இணைந்திருக்க வேண்டும்.

அரசாங்கமும், அரசியலாரும் இணைந்திருந்து செயல்பட்டால் இது இயலக் கூடியதாகவே இருக்கும்.

அப்படி வரும்போது—பார்க்கின்ற கணக்கில் இலாபம் அதிகமிருக்கும்! இழப்பு இருப்பதற்கில்லை—அரசியல் ஒன்றுக்குத் தவிர!

அதனைச் செய்து முடிக்க இந்த மே நாள் விழா வழி வகுக்குமானால் 1969ம் ஆண்டு, 1886ஐப்போல் 1889ஐப்போல் காலமெல்லாம் நினைவுகூறத் தக்கதாக இருக்கும்,

தம்பி

ஒரே ஒரு பிரச்சினை!

"நேற்று, கூட்டத்திலே என்ன விசேஷமான விஷயம் பேசினார். நான் வேறோர் இடத்திலே மாட்டிக்கொண்டேன்—ஒரு வம்பிலே சிக்கிக்கொண்டேன். அதனால் வர முடியவில்லை."

போயும் போயும் உனக்கு நேற்றுதான் நாள் கிடைத்ததா வேலை பார்க்க, நேத்துப் பிரமாதம்......

"என்ன? என்ன? புது சேதி ஏதாவது......!"

"சாகடித்துவிட்டார்! அந்தப் பயல்கள் இருந்திருந்தால் முகம் செத்துப் போயிருக்கும், ஏண்டா பசங்களா! நீங்களா சட்டசபைக்குப் போகனும்? என்று கேட்டுவிட்டு ஒரு சமாசாரம் சொன்னார், தூக்கி வாரிப் போட்டுவிட்டது போயேன்......"

"என்ன சொன்னார்......என்ன?"

"என்னோடு இருந்துவிட்டு ஓடிப்போனான்களே இந்தப் பசங்க, இதுகளெல்லாம், என்னமோ எம். ஏ. பி. ஏ., என்று போட்டுக்கொள்கிறானுங்க. இந்த எம். ஏ., பி. ஏ., எல்லாம் எப்படிக் கிடைச்சுது? போனா போகட்டும்னு நான் பல பேருக்குச் சொல்லி, மார்க்கு போடச்சொல்லி, இதுகளுக்கு பி. ஏ., எம். ஏ.,ன்னு வாங்கிக் கொடுத்தேன்—என்று சொன்னாரு......சிரிச்சி சிரிச்சி வயிறெல்லாம் புண்ணாப் போச்சிப்போ......"

"அப்படியா சொன்னார்?"

"ஆமாம்! அந்தப் பசங்களுக்கு இதைக் கேட்டா, வெட்கம் பிடுங்கித் தின்னுமல்லவா?"

"அட போப்பா! எனக்குந்தான் வெட்கமா இருக்குது; இப்படியெல்லாமா பேசுவது?"

"அட, அந்தப் பசங்களைச் சொன்னா உனக்கு என்ன வெட்கம்? நீ என்ன பி. ஏ.வா, எம். ஏ.வா?"

"நீயும் நானும் பி. ஏ., இல்லெ......ஆனா, நம்ம குருசாமி ஒரு பி. ஏ.; நம்ம ஜெனார்தனம் எம். ஏ. இன்னும் ராஜாராமு, வீரமணி, வேதாசலம் இவர்களெல்லாம் எம். ஏ., பி. ஏ,ன்னு இல்லையா! என் கூட இருந்த வர்களுக்கு நான் தான் மார்க்கு போடச் சொல்லி பிஏ·எம்ஏ. ஆக்கினேனென்னு அவர் சொன்னா, அது இவங்களுக்கும் பொருந்துதே. அப்படித்தானே பொதுவா உள்ளவங்களெல்லாம் எண்ணிக்கொள்ளுவாங்க, தன் பக்கத்திலேயே பி. ஏ.வும் எம். ஏ.வும் வைத்துக்கொண்டு, நான்தான் பாஸ் போட்டு இதுகளுக்குப் பட்டம் வரச்செய்தேன்னு சொன்னா, நம்ம பி. ஏ., எம். ஏ.,க்களுக்கும் கூடத்தானே சுருக்குன்னு தைக்கும்......, வெட்கமா இருக்கும்."

4.5.1969

"அடே, அதுக்குச் சொல்றியா"

"தன்னேடு இருந்துகொண்டு தனக்குப் பயன் பட்டுக்கொண்டு இருந்த வரையிலே சும்மா இருந்து விட்டு,வேறே கட்சியானதும் இதுகளுக்கு பி. ஏ. எம். ஏ எல்லாம் நான்தான் வாங்கிக் கொடுத்தேன்னு பேசருரே, இதோ இப்ப இவரோடு இருக்கிற பி. ஏ. எம். ஏ. க்களுக்கும் இதே 'சூடு' தானே கிடைக்கும், இவரை விட்டுப்பிரிந்தா? என்று பொதுவா இருக்கிறவங்க, பேசிக்கொள்ளமாட்டாங்களா?"

"அட, அப்ப பார்த்துக்கொள்வோம், இப்ப, இதுகளுக்குச் சூடு கொடுக்கிறபோது, கேட்கறதுக்கு சந்தோஷமா இருக்குது; இல்லையா?"

"அதுபோலக்கூட எனக்கு இதிலே சந்தோஷம் ஏற்படவில்லை, கூட இருக்கிறவரையிலே, இரத்தினமே மாணிக்கமே! அறிஞனே! கவிஞனே! என்றெல்லாம் தூக்கிவைக்கிறது பிறகு அதே ஆசாமிகளுக்கு அ ஆ தெரியாதுன்னு பேசுகிறதுன்ன, கேட்கும்போது சிரிப்பு வரும், கை தட்டலாம்; ஆனல், கொஞ்சம் யோசித்துப் பார்க்க ஆரம்பிச்சா, சரி இல்லேன்னு நமக்கே தோணும் நெஞ்சு உறுத்தும். எனக்கு உண்மையாச் சொல்றேன், வெட்கமாகக்கூட இருக்குது. முன்னுக்குப்பின் முரணுன பேச்சா இருக்குதே என்பதாலே அல்ல. இந்தப் பயல்களுக்கெல்லாம், நான்தான் பி.ஏ. எம்,ஏ.ன்னு பட்டம் வாங்கிக் கொடுத்தேன்னு அவர் சொல்கிற போது, அந்தப் பசங்க இவ்வளவுதானு என்றுமட்டுமா ஜனங்க எண்ணிக்கொள்ளுவாங்க, இந்தப் பெரியவர், பார்த்தயா. வெட்டி ஆளுங்களுக்கெல்லாம் அவனுங்க தனக்கு வேண்டியவனுங்க என்கிறதுக்காக, யாராருக்கோ சொல்லி மார்க்கு போடச் செய்து பட்டம் வாங்கிக் கொடுத்தாராம்! அவரே சொல்கிருர், இவ்வளவு பெரிய தலைவரா இந்த மாதிரி வேலை செய்வது? போலிச் சரக்குகளை வைத்துக்கொண்டுதான் கட்சி நடத்தி வந்தார்னு, அவர் பேசறதிலே தெரியுது. அது சரியா? அப்படின்னு பொதுவா உள்ளவங்க எண்ணிக் கொள்ளமாட்டாங்களா? அதை நினைச்சாத்தான் எனக்கு வெட்கமாக இருக்குது."

"பொதுவா உள்ளவங்களைப்பத்தி நமக்கென்ன கவலை. நாம்—அந்தப் பசங்க! அவ்வளவுதான்"

"அதுபோதாதே, அந்தப் பசங்களையும் நம்மையும் கவனித்துக்கொண்டு, எதிலே உண்மை இருக்கு. நியாயம் இருக்கு என்று கண்டறிந்து ஆதரவு தருவதற்கு இருக்கிற பொதுவானவர்களைப் பொறுத்துத்தானே கட்சி வளருவது இருக்கிறது."

அட சரிதான்போயேன், மகாகண்டவன், மேதாவிதான் நீ......போ......போ......"

என்ன அண்ணு! எங்கே நடைபெற்ற உரையாடல்? கற்பனையா? காதில் விழுந்ததா? என்றெல்லாம் கேட்கத் தோன்றும் தம்பி!

கற்பனை அல்ல என்று மட்டும்தான் கூற விரும்புகிறேன். சென்னையில், எங்கோ ஓரிடத்தில் நடைபெற்ற உரையாடல், முழுவதும் இட்டுக்கட்டியதல்ல.

இதை ஏன் நான் உனக்கு எடுத்துக் கூறுகிறேன் என்ருல், திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது பகை உமிழும் போக்கில், எதை வேண்டுமானுலும் சொல்லி அந்த நேரம் 'சபாஷ்' வாங்கிக்கொள்ளும் போக்கு, இப்போதெல்லாம் திராவிட கழகத்திலேயே சிலருக்குப் பிடிக்கவில்லை என்பதை இந்த உரையாடல் ஓரளவுக்கு விளக்குவதனுல்தான். மற்றபடி அந்த இடத்தார் தொடுத்திடும் ஏசல்களைக் கண்டு, எனக்கென்ன புதிதாக வருத்தம் வர இருக்கிறது. எவரும் எவ்விதமான பகையின்போதும் சொல்லக்கூசும் சொற்களை எல்லாம் சொல்லியாகிவிட்டது — நானும் கேட்டுக் கேட்டுப் பழக்கப்பட்டாகிவிட்டது.

திடுக்கிடவைப்பது—நாவினுல் சுடுவது — பிரசார முறையில் ஒருவகை.

வாதிடுவது—வழிக்குக்கொண்டுவருவது — வாஞ்சனையைப் பெறுவது–மற்ருேர்வகை, பிரசார முறையில்.

தம்பி! நமக்கு இந்த இரண்டாவதுமுறை போதும் —அது தக்க பலனளித்து வருகிறது—அந்த முறையை மேலும் மேன்மையுடையதாக்கிக்கொள்வதற்கே நமக்கு எல்லா வாய்ப்புகளும் பயன்பட வேண்டும் என்பது என் விருப்பம்,

மயிலே! மயிலே! இறகுபோடு என்ருல் போடுமா என்பதுபோல தற்குறிகளும், கற்றறி மூடர்களும், சுயநலப் புலிகளும் நயவஞ்சக நரிகளும், ஆரிய அடிமைகளும் மலிந்துகிடக்கும் இந்தச் சமுதாயத்தில், சுடச்சுடக் கொடுப்பது 'ரோயரோய'த் திட்டுவது, ஏசலை வாரி வாரி வீசுவது என்னும் முறைதான் ஏதேனும் ஒரு துளியாவது பலன் அளிக்குமே தவிர, அன்பர்களே நண்பர்களே! எண்ணிப் பாருங்கள், தவறு இருந்தால் எடுத்துக்காட்டுங்கள்! காரணம் காட்டி எங்கள் கோரிக்கையை மறுத்துப் பேசுங்கள்! என்றெல்லாம் கனிவுடன் பேசுவது, சரியல்ல, பலன்தராது — என்று எண்ணிக்கொண்டு, கேட்டதும் திடுக்கிடட்டும், தீ போலச் சுடட்டும், என்ற முறையைப் பிறர் கையாள்வது வெற்றி தருகிறது என்று எண்ணிக்கொள்வார் யாருமில்லை—பேசுபவர்களுக்கு அன்றைக்கு ஒரு மனத்திருப்தி — வெளுத்துக் கட்டிவிட்டோம் — ஒரு பிடி பிடித்துவிட்டோம்—பயல்களுக்குச் சரியான சவுக்கடி கொடுத்துவிட்டோம்—என்று எண்ணி எக்களிக்கவும், எதிரே நின்று எதை எதையோ எதிர்பார்த்து ஏவல் செய்வோர், "ஒழிந்தானுக! இனித் தலைக்காட்ட மாட்டானுக! தொலைஞ்சானுக! இனி கால் தூசுக்கும் எவனும் இதுகளை மதிக்கமாட்டானுக!" — என்று பேசக் கேட்டு, பூரிப்பதும்தான் மிச்சம் — உருவான பலன் கிடைப்பதில்லை. ஆரஅமர இருந்து கணக்குப் பார்த்தால், உண்மை விளங்காமற் போகாது, நன்ருகச் சிந்தித்துப் பார்த்தால், ஏன் சிலர் இந்த முறையில் நடந்துகொள்ள நேரிடுகிறது என்பது விளங்காமற் போகாது. நமக்கென்று ஏற்பட்டுள்ள வரலாற்றினைக் கூர்ந்து பார்த்தால் நாம் ஏன் அந்த முறையினை வெறுத்தொதுக்கிவிட்டோம் என்பதும் புரியும்.

ஏமாற்றம், தம்பி, எரிச்சல் தரும்–திருப்தி, மகிழ்ச்சியையும் அமைதியையும் தரும்.

நமக்கு இன்னது கிடைக்கவேண்டும் என்று ஆவலாக எதிர்பார்த்து, அதை அதை அடைவதற்காகப் பாடுபட்டும், அது கிடைக்காமற்போனல், ஏற்படும் ஏமாற்றம் ஒருவகை.

அதனினும் கொடியது, கிடைக்கவேண்டும் என்று நாம் எதிர்பார்த்தது நமக்குக் கிடைக்காமற்போனசுடன் மற்றவருக்கு, அதிக சிரமமின்றி, கிடைப்பதைக் காணும்போது ஏற்படும் ஏமாற்றம்!

இந்த நேரத்தில் மனதில் மூண்டுவிடும் எரிச்சல்

மனதை நிச்சயமாக எரிமலையாக்கிவிடும்—பிறகு சொல்லவா வேண்டும்,

பொறுக்கிப் பசங்க

போக்கிடமத்ததுக

என்ற 'பாஷை' மளமளவென்று பிறக்கும். இது சகஜம்.

'திராவிட முன்னேற்றக் கழகம்' துவக்கியதிலிருந்து தம்பி, நாம் எதில் ஏமாற்றம் அடைந்தோம், எரிச்சல் கொள்ள?

திக்குத் தெரியாத காட்டில் துரத்திவிடப்பட்ட பாலகர்கள்போல் மேல் வேட்டியை உதறிப் போட்டுக் கொண்டு, உழைத்தது வீணுச்சே, இனி உலகு என்ன வழி காட்டுகிறதோ பார்ப்போம் என்ற ஏக்கத்துடன் முதலாளியின் மாளிகையைவிட்டு வெளிஏறும் உழைப்பாளியைப்போல, அன்று நாம் வெளியேறினோம்.

வெளியேறினோம் என்பதைக்கூட உலகு ஒப்பக் கூடாது என்று, வெளியேற்ற எல்லா ஏற்பாடும் செய்து வைத்திருந்தேன், திருட்டுப்பயல்க. எப்படியோ அதைத் தெரிந்துகொண்டு, தலைதப்பினுல் தம்பிரான் புண்யம் என்று ஓடிவிட்டார்கள், என்று தூற்றினர். துக்கத்தைச் சுமந்துகொண்டு, துணைக்கு வருவோர் யார் இருக்க முடியும் என்று ஏதும் தெரியாமல், வெளியேறினோம்.

அரசியல் என்ருல் என்ன சாமான்யமா? அன்னக் காவடிகளெல்லாம் பொது வாழ்வில் நிலைத்திருக்க முடியுமா? இதுகளுக்கு வாழ்வு இருண்டுவிட்டது. ப்யூஸ்போன பல்புகளாகிவிட வேண்டியதுதான்—சீந்துவார் யார் இருக்கப்போகிருர்கள்—திகைத்துத் திண்டாடி தெருவில் சுற்றி, தேசாந்திரியாகி, ஏதாவது ஒரு கட்சியின் காலடியிலே விழுந்து பிச்சைப் பிழைப்பு நடத்தவேண்டியதுதான், என்று "வாழ்த்தி வழியனுப்பினுர்கள்".

தம்பி! நாம் உருத்தெரியாமலாகிவிடவுமில்லை, உருமாறிப்போய்விடவுமில்லை. ஊர் மக்கள் நம்மை உதவாக்கரைகள் என்று ஒதுக்கிவிடவுமில்லை. வளர்ந்து நிற்கிருேம்.

எப்படி இது அவர்களுக்கு ஏமாற்றத்தையும் எரிச்சலையும் தராமலிருக்கும்,

தம்பி! நாம் மேற்கொண்டுள்ள காரியம் எளிதானது, நமக்கு அந்தக் காரியத்தை முடித்துக் காட்டும் ஆற்றல் ஏராளமாக இருக்கிறது என்ற எண்ணம் நம்மில் யாருக்கும் எழுந்ததில்லை, எனவேதான் நம்மால் எவ்வளவு சாதாரண வெற்றி பெற முடிகிறபோதும், மனதுக்கு ஒரு அலாதியான மகிழ்ச்சி பிறக்கிறது.

சுடு சோறும், சுவையான குழம்பும் பாட்டாளிக்கு இனிக்கிறது, பாதம் அல்வா பதிர்பேணி பங்களாவில் கசப்பாகக்கூட ஆகிவிடுகிறது. நாம் அரசியலில் பொது வாழ்வுத் துறையில், தீண்டப்படாதாராக—ஒதுக்கப்பட்டோராக—விரட்டப்பட்டவர்களாக — ஆக்கப்பட்டவர்கள்! எனவே நமக்குக் கிடைக்கும் மிகச் சாமான்யமான வெற்றியும், மனதுக்கு மகிழ்ச்சியூட்டுகிறது. மேலும் பல வெற்றிக்கான வாய்ப்பினையும் வலிவையும் தருகிறது. இவ்விதமின்றி நாம், நமது ஆற்றலைக் குறித்து மிக அதிகமான கணக்கிட்டுக்கொண்டு நாம் சாதிக்க வேண்டிய காரியம்பற்றி மிகக் குறைவான கணக்கிட்டிருந்தால், எத்துணை மனவேதனை ஏற்பட்டிருந்திருக்கும், தெரியுமா!

நமக்கு இருக்கும் திறமையும் குறைவு, அதைவிடக் குறைவு நமக்கு அமைந்துள்ள வாய்ப்புகளும் வசதிகளும்; நாம் எதை எதை மாற்ற வேண்டும் என்று பாடுபடுகிருேமோ. அவைகளைக் கட்டிக் காப்பவர்களும், அதனுல் பலன் பெறுபவர்களும், அறிவிலிகளுமல்ல, அவர்களுக்குக் கிடைத்துள்ள வாய்ப்பும் வசதியும் நமக்கு உள்ளதைவிட மிக அதிகமானது, எனவே நமது பணியின் பலன், வேகமாக உருவெடுக்க முடியாது என்பதை உணருகிறேன், எனவே உள்ளத்திலே, அமைதியேகூட ஏற்படுகிறது—சிறு உருவில் பலன் தெரியும் போதும் மகிழ்ச்சி பிதக்கத்தான் செய்கிறது. நம்மால் இவ்வளவாவது முடிகிறதே என்ற மகிழ்ச்சி!

இதே நிலையில்தான் பெரியார் இருக்கவேண்டும் என்று நான் கூறவில்லை—கூறும் அளவுக்கு நான் குணம் கெட்டுப்போனவனல்ல.

அவசரப்படவும் ஆத்திரப்படவும், அவருக்கு உரிமை இருக்கிறது. ஏனெனில் அவர் ஒரு அரை நூற்ருண்டுக் காலமாக உழைப்புக்குப் பிறகும், கண்ணுக்குத் தெரியும் பலன் சிறிய அளவாக இருப்பது கண்டு, அவர் சலித்துக்கொள்கிருர்.

ஆனுல் அவர்மட்டுந்தான், அந்த உரிமை பெற்றிருக்கிருரே தவிர, அவருடன் பணியாற்ற அவ்வப்போது அவருக்குக் கிடைப்போர்கள் உரிமை பெற்றவர்களாகிவிட முடியாது.

சர்ச்சிலுக்கு ஈடன் கிடைத்தார்—பெரியார் எந்த ஈடனையும் பெற்றதில்லையே!

கிடைப்பவனெல்லாம், காட்டிய வழி நடக்க, போட்ட கோட்டை மீருதிருக்க, மாட்டிய கடிவாளத்துக்கு ஏற்றபடி திரும்ப, பயிற்சி பெற்று, படையில் இருக்கிருர்கள்—ஏதோ ஓர் கட்டம் வருகிறது—பிய்த்துக்கொண்டு ஓடுகிருர்கள், அல்லது பிய்த்தெறியப் படுகிருர்கள்.

ஜீவாவும் இராமநாதனும், விசுவநாதமும் பால சுப்பிரமணியனும், சாமி சிதம்பரனுரும் வல்லத்தரசும், நீலாவதியும் இராமசுப்பிரமணியமும், பொன்னம்பலனுரும் பாண்டியனுரும், புகழுடன் விளங்கி, இரத்தினங்களாய், மாணிக்கங்களாய், ஒளிவிட்டு வந்து, பிறகு வீசி எறியப்பட்டுப் போனுர்கள்.

நான் இப்போது, காரணங்களை ஆராயவில்லை; பழய கதையையும் கிளறவில்லை. பெரியாரின் பெரும் படை வளர்ந்து வருவதற்குப் பதிலாக, எப்படி அடிக்கடி வதைபட்டு சிதைபட்டு, மாற்றி அமைக்கப்பட்டு வந்திருக்கிறது, என்பதைக் காட்ட மட்டுமே இதைக் கூறுகிறேன்; குற்றம் சாட்ட அல்ல.

நண்பர் குருசாமிக்கே இது 'மூன்ருவது ஜென்மம்' என்று கருதுகிறேன் — இருமுறை அவரும் 'புளித்தவராகி' விட்டவர்தான்.

விலகியவர்கள்—விலக்கப்பட்டவர்கள்— அந்தந்த 'கால கட்டத்துக்கு' ஏற்றபடி, கசப்பும் காரமும் காட்டியும் கண்ணீர் வடித்துக் கைபிசைந்து நொடித்துப் போயும், வேறு கட்சி தேடிக்கொண்டும் அல்லது வாழ்க்கைக் கலையில் ஈடுபட்டும், பல்வேறு வழியில் சென்றுவிட்டனர். நாம் மட்டுந்தான், தம்பி, கொள்கையை மாற்றிக்கொள்ளாமல், மாற்ருருடன் கூடிக் குலவிடாமல், முக்காடிட்டு மூலைக்குச் சென்றிடாமல், வீண் வீம்புக்குப் பலியாகாமல், கலத்திலிருந்து வீசி எறியப்பட்டவர்கள், சுழலுக்கும் சுருவுக்கும் தப்பி, தெப்பத்தின் துணைகொண்டு எங்கோ ஓர் திட்டு தேடி

அலைந்து, அங்கு தங்கி, சிறியதோர் சிங்காரத்தோணி அமைத்துக்கொண்டு, அதிலேறிப் பயணம் செய்வோர்போல நமது பயணத்தை, அதே பாதையில், தொடர்ந்து நடத்துகிறோம்.

நம்மீது எரிச்சலும் பகையும் இந்த அளவுக்கு ஏற்படுவதற்கான காரணம் இதுதான்.

''விரோதியாகு!'' என்கிறார்கள். ''ஐயா! அது எப்படிச் சாத்தியமாகும். எனக்கு அத்தகைய கெடுமதி கிடையாது. நம்மால் எந்த அளவுக்குச் செய்ய முடிகிறதோ அந்த அளவுக்குக் கொள்கைக்காகப் பணியாற்றி வருவோம்'' என்று நாம் கூறுகிறோம்; கோபம் அதிகமாகிறது. என்னென்ன விதமாகவெல்லாம் தமது பகையைக் காட்டிக்கொள்ளச் சந்தர்ப்பங்கள் கிடைக்கின்றனவோ. அந்த முறையில் நடந்துகொள்கிறார்கள் இன்றைய அணிவகுப்புக்குக் கர்த்தாக்களாகி விட்டவர்கள்.

அவர்கள் மிகப் பெரிய சந்தர்ப்பம், நம்மைத் தீர்த்துக் கட்ட, அடித்து நொறுக்க, என்று எண்ணிக் கொண்டிருப்பது, அடுத்து வரும் தேர்தல்.

''பயல்கள் சினிமா நாடகம் எழுதிக் கொஞ்சம் பணம் சேர்த்து வைத்திருக்கிறார்கள். இந்தத் தேர்தலில், அதை எல்லாம் தொலைத்துவிட்டு, கையில் பிச்சைத் தட்டு ஏந்திக்கொண்டு அலையப்போகிறார்கள் அதை இந்தக் கண்ணால் பார்த்துவிட்டுத்தான்...'' என்று கூறினாராம், நீண்ட கால நோன்புக்குப் பிறகு, கழகத்தின் நடுநாயகமானவர்!

பார் தம்பி, அவர்தம் கண்களுக்கு, எத்தகைய விருந்து வேண்டுமென்று விரும்புகிறார்.

கண்ணால் காணவேண்டிய விருந்து எத்தனை எத்தனையோ இருக்கிறது —எண்ணத்தில் அவைகளைக் கொள்ளக்கூடாதா!

இராஜ பவனத்தில் நேரு பண்டிதர் கவலையுடன் உலவுகிறார், போடு, கையொப்பம், திராவிட நாடு பிரிவினைக்கு இப்போதே போட்டாக வேண்டும், இல்லையானால், நாளையத் தினம் பகல் பனிரண்டு மணிக்கு சௌகார்பேட்டை கொளுத்தப்படும்—இதோ தீக்குச்சி, என்று அவரிடம் காட்டுவது போலவும், அது கண்ட அவர், கையொப்பம் போடுவது போலவும், கடற்கரையில் கூடியுள்ள கால் கோடி மக்கள் கொண்ட கூட்டத்தில், ''பெரியாரின் தளபதி பிரியத்துக்கும் நம்பிக்கைக்கும் உரிய தளபதி என்ற முறையிலே, இதோ நான் அவர் சார்பில் திராவிட நாடு திட்ட வெற்றி பற்றிய பிரகடனத்தைப் படிக்கிறேன். கேட்டு இன்புறுக'' என்று படித்துக் காட்டுவதுபோலவும் நடுநாயகருக்குத் தோன்றக் கூடாதா?

ஐயோ! அம்மா! பிச்சை போடுங்க என்று நாம் பிச்சை எடுக்கிற காட்சியைக் காணத்தான், கண்கள் விரும்புகிறதாம்!

பகற்கனவு காண்பது என்று தீர்மானித்தான பிறகு, கொஞ்சம் நல்ல கனவாவது காணக்கூடாதா!

தேர்தலில் ஈடுபடும் நம்மை திக்கு முக்காடச் செய்து, தோற்கடித்துவிட்டு, அந்தத் தோல்வியால் நாம் எலும்புந் தோலுமாகி, பிறகு இருக்குமிடம் தெரியாமல் போய்விடுவோம் என்று அன்பர் ஆசைப்படுகிறார்.

தேர்தல் வருகிறது, ஈடுபடப் போகிறோம், வெற்றி வெற்றி! எங்கும் வெற்றி!—என்று வெறிகொண்டு நாம் அலைந்து மிக அதிகமாகப் பலனை எதிர்பார்த்து இந்தத் தேர்தலில் ஈடுபட்டால், தோல்வி ஏற்பட்டால் நாம் துவண்டு போவோம், துளைக்கப்பட்டுப் போவோம். ஆனால், தம்பி! நாம், நம் வலிமை, மாற்றான் வலிமை, நமக்கிருக்கும் வாய்ப்பு, நாட்டிலே உள்ள நிலைமை, ஆகிய எல்லாம் அறிந்து, அதிகம் எதிர்பார்க்காமல், நம்மால் பொதுத் தேர்தலில் ஈடுபட்டு, காங்கிரஸ் ஒரு சர்வாதிகாரத்தை ஏற்படுத்தவிடாமல் தடுக்கும் ஜனநாயகக் கடமையைச் செய்ய முடிகிறதே, அது போதும் என்ற உள்ளத் தூய்மையுடன், திருப்தியுடன் ஈடுபட இருக்கிறோம். ஆகவே, அன்பர் ஆவலாக எதிர்பார்க்கும் காட்சி கிடைக்காது.

எத்தனை எத்தனையோ காட்சிகளை அவர், பாபம், காண விரும்பினார், முடியத்தான் இல்லை.

திருமணத்தன்று பெரியார் மாளிகையில் சத்தியாக்கிரகம் நடத்தி ஊரே திரண்டுவந்து கூடி நின்று வேடிக்கை பார்க்கும் காட்சியைக் காண விரும்பினார்.

நான்தான் அது எவ்வளவு அநாகரீகமான போக்கு என்பதை எடுத்துரைத்தேன்.

இலட்சக்கணக்கான மக்கள் கூடிடும் கூட்டத்தில், கண்டனம் தெரிவித்து ஆவேசமாகப் பேச விரும்பினார். சுவரொட்டியே தயாராயிற்று. நான்தான், நாடு நம்மைத்தான் நிந்திக்கும் என்றேன்.

இன்னும் அவர் காண விரும்பிய காட்சிகள் பலப் பல. ஒன்றுக்கொன்று தரத்தில் மட்டமானவை.

இப்போது, நாம் பிச்சை எடுப்பதைக் காண விரும்புகிறாராம். என்ன அற்புதமான மனமடா, தம்பி, உலகில் இன்னும் ஒரு பத்து பேருக்கு இப்படிப்பட்ட மனம் இருந்தால் போதுமல்லவா!!

தேர்தலில் நமக்குப் பெரிய விபத்து நேரிட்டுவிடப் போகிறது என்று இவர் கணக்கிடுவதற்குக் காரணம் என்ன என்று எண்ணுகிறாய்?

காமராஜர் திராவிடச் சமுதாயக் காவலராம்—எனவே அவர்மீது 'தூசு' விழுந்தால், இவருக்குக் கண்ணில் மிளகாய்ப் பொடி பட்டது போலவாம்!

காமராஜர்மீது இந்தக் கனிவு வரக் காரணம் என்ன?

திராவிட நாடு தேவை

என்று வடநாட்டுத் தலைமையிடம் வாதாடினாரா என்றால் அதெல்லாம் இல்லை, ஒரே ஒரு காரணம்தான். அவருக்கு உத்யோகம் கொடுத்தார், இவருக்குக் கொடுத்தார் என்ற பட்டியல்.

காமராஜர் மக்களுக்கு என்ன செய்தார்? என்று கேட்பதல்லவா அரசியல் பிரச்சினை என்பீர்கள், தம்பி, இந்த நண்பர், வீடு சுகப்பட்டால் நாடு சுகப்பட்டது என்ற அளவுக்கு அரசியலின் நேர்த்தியை உயர்த்திக் கொண்டு விட்டார்.

தமிழனுக்குத் துளியாவது நன்றி காட்டும் புத்தி இருந்தால், நன்றி காட்டும் தமிழன் ஒருவனாவது இருப்பானானால். காமராஜர் சர்க்காரை எதிர்ப்பானா!!—என்று கேட்டாராம், பெரியார் இந்தப் போக்கை ஆதரிக்கிறார் என்ற ஒரே காரணத்துக்காக.

தம்பி, ஒரு போக்கு கொள்வது என்று துணிந்த பிறகு, முன்பின் யோசிக்காமல், பொருத்தம் அருத்தம்

தேடாமல், விறுவிறுப்பாகப் பேசுவது, ஒருவிதமான பிரசார முறையல்லவா, அந்த முறைப்படி, காமராஜர் ஏதோ, திராவிட மக்களுடைய நீண்டகாலத் தவத்தின் பயனாக முதலமைச்சராக வந்து, கேட்கும் வரங்களை எல்லாம் கொடுத்தவர் போலச் சித்தரித்துக் காட்டுகிறார்கள்.

இனித் தென்னாட்டில் ஒரே ஒரு பிரச்னை தான்,

"நீ திராவிடநாடு பிரிவினையை ஏற்றுக் கொள்கிறாயா?

"ஆம்" என்றால் என் நண்பன், 'இல்லை' என்றால் எனக்கு எதிரி.

இதுதான் இனி. இதில் தயவு, தாட்சணியம் கிடையாது. முன்பின் நட்பு கிடையாது. மதம் ஜாதி, மொழி, உறவுகூடக் கிடையாது."

எப்படித் தம்பி, பொறி பறக்கிறதல்லவா?

வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்பார்களே அதுபோல இல்லையா.

யாருடைய மணிமொழி? விடுதலைதான்!!

திராவிட நாடு பிரிவினையை ஒப்புக் கொள்ளாதவருடன், அவர் யாராக இருந்தாலும் சரி, ஒட்டு இல்லை உறவு இல்லை! விட்டுத் தள்ளு! என்கிறார்.

வீரம் கொப்பளிக்கிறது — கொள்கை ஆர்வம் கொழுந்து விட்டெரிகிறது, அல்லவா?

அவரே இன்று நன்றிகெட்ட ஜென்மங்களா! காமராஜர்—ஐயோ காமராஜர்மீதா எதிர்ப்பு—பாவிகளா, நீங்கள் பிடிசாம்பலாய்ப் போக! அவரை எதிர்ப்பதா; அவர்தான் மீண்டும் முதல் மந்திரியாக வேண்டும்—மூன்றாவது தடவையும் அவர்தான் வரவேண்டும்—அவர் விரும்புகிறவரையில் அவரேதான் — முதல் மந்திரிப் பதவி என்ற ஒன்று இருக்கும்வரையில் அவர்தான் வரவேண்டும்!—என்று முழக்கமிடுகிறார்.

ஏன்? திராவிட நாடு பிரிவினையைக் காமராஜர் ஏற்றுக்கொண்டாரோ? இல்லை, இல்லை, அவரிடம் அது பற்றி இவர் கேட்கக்கூட இல்லை! எனினும் அவர்தான் முதல் மந்திரியாக வேண்டும் என்று பேசுகிறார், என்னய்யா என்றாலோ, பிச்சை எடுத்து அலையப் போகிறீர்கள் பார்! பார்! என்று சபிக்கிறார்.

திக்கு நோக்கித் தண்டனிட்டபடி காமராஜருக்கு இன்று ஆதரவு தேடுகிறார் நடுநாயகர். அது அரசியல் நேர்மையல்ல என்போரைச் சபிக்கிறார், கடுமையாகத் தாக்குகிறார்—பெரியாரோ, பி. ஏ., எம். ஏ., பட்டமே நான் வாங்கிக் கொடுத்தது, என்று பேசுகிறார்.

தம்பி! நம்மை இவ்வளவு கேவலமாகப் பேசி ஏசுகிறார்களே என்று கவலைப்படாதே, துக்கப்படாதே, நம்மையாவது பிச்சை எடுக்கச் சொன்னார்; இதோகேள் வேறோர் அர்ச்சனையை,

''திராவிட, தமிழக என்ற பேரைக்கண்டு எவனாவது முகம் சுளித்தால், அவன்முகத்தில் காரித்துப்புங்கள். தனது தாய்நாட்டின், தனது இனத்தின் பேரைக் கேட்டு முகம் சுளிக்கும் துரோகியின் கூட்டுறவில் நமக்கு என்ன நன்மை இருக்கமுடியும்? இந்தச் சிறு காரியத்துக்கு இணங்காத மக்கள் எப்படி மனிதத்தன்மையும் சுதந்திரமும் பெறமுடியும்''

தம்பி! தீப்பொறி கண்டாயா?

காரித்துப்புங்கள்! முகத்தில் காரித்துப்புங்கள்! துரோகியின் முகத்தில் காரித்துப்புங்கள்!

விடுதலையில் வந்த வீரமுழக்கம்.

எவனொருவன், திராவிடன், தமிழ்நாடு என்று சொன்னால் முகம் சுளிக்கிறானோ, அவன் துரோகி.

அவன் கூட்டுறவில் நமக்கென்னநன்மை விளையப் போகிறது என்று கேட்டது விடுதலை.

திராவிடநாடு—பூ!பூ!இதென்ன காட்டுக் கூச்சல் என்று கேட்கிறார் காமராசர்.

தமிழ் நாடு என்று பெயர்வைக்க முடியாது போ, என்று முடுக்காகக் கூறுகிறார், முதலமைச்சர் காமராஜர்.

அவருக்கு "திருஷ்டி கழித்து' ஆலம் சுற்றிப் பொட்டிட்டு, அரசாள அழைக்க, 'லாலி' பாட வேண்டுமாமே, சரியா?

அண்ணன்,

அண்ணாதுரை

(19—8—56 திராவிட நாடு இதழில்)

போற்ற வாராய்

அன்பினால் வித்து இட்டு
அறிவெனும் சுடரை ஏற்றி
பண்பினால் உயர்ந்த மன்னன்
பாரினில் 'நம்ம' அண்ணன்!

உண்மையின் உயர்வு காட்டி
உழைப்பினால் வாழ்வு காட்டி
புன்மையை ஒழித்த மன்னன்
பொறுமையின் சிகரம் அண்ணன்!

சிந்தனை தெளிந்து ஓங்க
சீரிய வழிகள் தந்து
வந்தனைக் குரிய தானான்
வணங்குமென் நெஞ்சில் நின்றான்!

இத்தரை போற்றும் வண்ணம்
புதியதோர் ஆற்றல் தன்னால்
உத்தமன் ஆகி நின்று
உள்ளமே கொள்ளை கொண்டான்

தேர்ந்தநற் றமிழின் எண்ணம்
சிந்தனைப் பெருக்கி லூற்றி
ஆர்ந்தநற் சொல்லின் வண்ணம்
அடுக்கியே கொடுத்தான், நன்றி!

ஆதலால் பேதை நெஞ்சே
அண்ணனை நினைவி லேற்றி
பாதக உலகு விட்டு
பண்புடன் போற்ற வாராய்!

—ந. சௌந்திரராஜன்.

‘ஓவராயல்’

[கலைச்செல்வன்]

“என்னுங்க, சோமு! ரொம்ப நாளா நம்ப சைக்கிளே கவனிக்கிறேன், கவனிக்கறேன்னு சொல்லிட்டே, இருக்கீங்களே, இன்னக்கி ‘ரெஸ்ட்’ தானே? கொஞ்சம் கவனிக்கப்படாதா?” என்று கேட்டுக்கொண்டே சைக்கிளிலிருந்து இறங்கினர் பலசரக்குக் கடை பங்காருசாமி.

“வாங்க! வாங்க! ஒக்காருங்க! நான் ஒருத்தனுவே எல்லா வேலையையும் செய்யறதனுலே, ரொம்ப பேரு கோவிச்சுக்கிற மாதிரி ஆயிடுது! உங்கநேரம், இன்னக்கி வேலெ கொஞ்சம் மட்டு! உங்க சைக்கிளை இன்னக்கி பெரமாதமா செஞ்சுடலாம்! ஓவராயல் தானே?” என்று கூறிக்கொண்டே பஞ்சர் ஒட்டிய சைக்கிளுக்குக் காற்றடித்து முடித்தான் ராதா சைக்கிள் ஷாப் ஓனர் சோமு.

“ஓவராயலுக்கு எவ்வளவுங்க சார்ஜ்? இரண்டு ரூபாதானே?”

“என்னுங்க, அநியாயமா சொல்றீங்க? வெலெவாசி விக்கற நிலயிலே ரெண்டு ரூபா எதுக்குக் கட்டும்? சீமெண்ணெய் வேற ஒரு பாட்டல் வாங்கணும். அஞ்சாறு மணிநேரம் மெனக்கெடனும்! நாலு ரூபா கொடுங்க, போதும்! கொன்னுபுடலாம் சைக்கிளை!”

“அய்யோ! அப்படி ஏதும் செஞ்சுடாதீங்க! சைக்கிள் புதுசு, வீணுப் போயிடும்! எங்க தாத்தாவுக்கு அவரோட தாத்தா பிரசன்டேசனு வாங்கித் தந்தது......” நகைப்பில் அனைவரையும் ஆழ்த்தியவர், மெதுவாக அருகிலிருந்த நீளக் கல் பெஞ்சில் அமர்ந்து, அன்றைய பேப்பர் படிப்பதில் மூழ்கிவிட்டார்.

சைக்கிளை ஒரு ஓரமாகத் தள்ளி வந்த சோமு, ஒரு கம்பியை எடுத்து சீட்டியில் மாட்டி, அக்கம்பியை பந்தலிலிருந்த மூங்கிலில் செருக ஆரம்பித்தான். பின்புறச் சக்கரத்தைக் கழற்றினுன். பிறகு ஒவ்வொரு பகுதியாகக் கழற்றினுன்.

தன்னுடைய வீட்டிற்கு முன்னிருக்கும் சிறிய இடத்தில் நாற்புறமும் மூங்கில்களை நட்டு ஐந்தாறு கீற்று களைப்போட்டுப்பந்தல்என்றுஅதற்குப் பெயர் சூட்டி ராதா சைக்கிள் ஷாப்பாக மாற்றிவிட்டான். அவ்வூரிலிருந்து வெளியூர் செல்லும் ரோடு ரிடயர் ஆன தாத்தாவைப் போலிருப்பதால் அக்கம் பக்கமிருந்து வெளியூர் செல்பவர்களுக்கு ஓரளவு ரிப்பேர் ஏற்படும். சோமுவிற்கு ஓரளவு வருவாயும் கிடைக்கும். அவ்வூரிலிருக்கக் கூடிய ‘நெம்பர் ஒன்’ கடையும் அதுதான்! ‘நெம்பர் டென்’ கடையும் அதுதான்! இருப்பது அது ஒன்றுதானே!

“நகராட்சித் தேர்தலில் பிரபல வியாபாரி பழனியப்பர் மிகக்குறைந்த ஓட்டில் தோற்றிட்டார்”

“தோத்துட்டாருங்களா? ரொம்ப நல்ல மனுசன்! பாவம்! ஒரு கம்பி போயிடுச்சுங்க! அதையும் போட்டுடறேன்!” வீலப் பெண்ட் எடுத்துக் கொண்டிருந்த சோமு எச்சரிக்கை கொடுத்துவிட்டு, கருமமே கண்ணுயினுன்.

“ஏங்க, பம்ப் கொஞ்சம் தாரீங்களா?”

“ஏம்பா, இப்பத்தானே கொஞ்சம் முன்னுலே காத்தடிச்சிக்கிட்டு போனே! அதுக்குள்ளால மறுபடியும் வந்துட்டியே? புதுக்காத்து வேணுமா? மூனு பைசா கொடுத்துவிட்டு, கொஞ்சம் எதுக்கு? பூராப் பம்பையுமேஎடுத்துப்போய் விளாசுடேய் தம்பி! கொஞ்சம் பிடிச்சுக் கோடா!”

ஒரு வீலப் பெண்ட் எடுத்தாகி விட்டது. அடுத்தவீலை எடுத்தான். டயர், டியூப் எல்லாம் கழற்றியாகி விட்டது. டியூப் இப்பொழுதுதான் இரண்டு, மூன்று நாளிற்குள் வாங்கியிருப்பார் போலுள்ளது.

“என்னுங்க, டியூப்.........”

“என்னையா, கூப்பிட்டீங்க? என்னென்ன வேணுமோ, எல்லாம் போட்டு வைங்க! வீட்டுக்குப்போய் பணம் எடுத்திட்டு வந்திடறேன்!” என்றவர் பதிலுக்குக் கூட காத்திராமல் சென்றுவிட்டார்.

“கொஞ்சம் உள்ளே வாரீங்களா? ஒரு கிளாஸ் காப்பி சாப்பிடுவீங்க!” குரல் கேட்டதும் டியூபை வைத்துவிட்டு உள்ளே சென்ருன். டம்ளரைப் பறித்து வேக வேகமாக உறிஞ்சினுன்.

“யாருப்பா கடையிலே இருக்கறது?” வெளியே இருந்து ஒரு குரல் கேட்டது.

“ஏன், என்னவேணும்?”

“ஒரு டியூப் வேணும்! எடுத்து வைங்க! நான் பக்கத்தூர்தான். சாயந்திரமா வர்ரேன், சைக்கிளோட” சற்று நேரம் மவுனம் நிலவியது, திட்டம், திட்டத்தை நிறைவேற்ற தயக்கம், மயக்கம் அனைத்தும் மோதின.

“சரிங்க! சாயந்திரம் வாங்க! புது டியூப் ஒண்ணு நேத்துதான் வாங்கியாந்தேன். போட்டுடலாம்!” தீர்மான குரலில் கூறியதும், கேட்டவர் சென்றுவிட்டார்.

காபி குடித்ததும், எழுந்துசெல்ல சற்று யோசனை! கீழே கிடந்த பாயைச் சற்று விரித்து உட்கார்ந்தவன் சுவரில் சாய்ந்து விட்டான்.

“வேலையெ விட்டுட்டு உக்காந்திட்டீகளா? போய் செய்யுங்க! அவுரு சீக்கிரம் வந்திடப் போருரு! மூனு மணி நேரமாவுது! முடிச்சு வைச்சுட்டீங்கன்னு, கை மேலே காசு வாங்கிடலாம்!”

“ம்... அவரு கொடுக்கலேன்னு... வேற காசே கெடைக்காதா? ஏராதா! அந்த மூலையைப்பாரு, ஒரு பழய டியூப் கெடக்கும்! சீக்கிரமா தேடி எடு! எடுத்திட்டியா? இங்கே கொண்டா பாக்கலாம்!” சற்றே பரபரப்புடன் கேட்டான்.

“எதுக்குங்க?” கேட்டுக் கொண்டே எடுத்து வந்து கையில் கொடுத்தாள்.

"எதுக்கா இருந்தா உனக்கென்ன ராதா? போயி ஒன் வேலெயைப் பாரு! அஞ்சு பஞ்சர் தானிருக்கு. அதும் ஒட்டியே இருக்குது! நீ தயாரா சாயந்திரம் இரு ராதா! நம்ப ரவியை டிரஸ் செஞ்சு வெச்சிரு. அஞ்சுமணிக்கு ரெடியாஇரு! போய் 'ஷோ' பாத்துட்டு வரலாம்!" உட்கார்ந்தவாறே வெளியே எட்டிப் பார்த்துவிட்டு, "இன்னும் அந்த ஆள் வரநேரமாகும்!" என முணகிவிட்டு, அமர்ந்துவிட்டான். கைகளிரண்டும் அந்த பழைய டியூபையே சுற்றிக் கொண்டிருந்தன.

"மத்தியானம் சாப்பாட்டுக்கும் கூட பக்கத்துவீட்டு அக்காகிட்ட பணம் வாங்கிதான் அரிசி வாங்கினேன். உங்களுக்குப் பணம் ஏதுங்க சினிமாவுக்குப் போக?" சற்றே சந்தேகத்துடன் கேட்டாள், ராதா.

"ராதா! நம்பகிட்டே ரிப்பேருக்கு. விட்டுட்டுப் போனரே, அந்த சைக்கிள்ளே புத்தம் புதிய டியூப் இருக்கு. இப்பதான் ஒருத்தன் புது டியூப் வேணும்னு கேட்டான், நம்ப கிட்டே ஒரு பழய டியூப் இருக்கு... சுருக்கெழுத்துக்காரனைப்போல் ஒவ்வொன்ருய் சொன்னுன்,

"மறுபடியும் ஆரம்பிச்சிட்டீங்களா, உங்க வேலையை! இதெல்லாம் வேண்டாங்க! வெளியே தெரிஞ்சிட்டா..."

"கேவலம்னு சொல்றியா? இதெல்லாம் யாருக்குத் தெரியப் போவுது? அவருக்கு சைக்கிளெப் பத்தி ஒண்ணுமே தெரியாது! இருக்கற மவராசன் தானே! இந்தப் பிச்செக்காசிலேதான் அவர் ஆஸ்தியே முழுகிடப் போவுதா?" தான் செய்யப் போகும் திறமையான வேலைக்கு சமாதானம் கூறிவிட்டு எழுந்தான்.

சோமுவிற்கு இது ஒன்றும் புதுப் பழக்கமல்ல! இரத்தத்தில் ஊறிய குணந்தான்! அவன் கடை வைத்ததிலிருந்து கடைக்கு வரும் சைக்கிள்களின் ஒன்றிரண்டு நல்லவற்றை நாசூக்காக எடுத்து விடுவான். கிராக்கி வந்தால் தள்ளி விடுவான். ரிப்பேருக்கு வருபவர்களின் கெட்ட காலமோ, இவனுடைய நல்ல காலமோ, இதுவரை ஒன்றும் இவனுடைய 'பெரட்டுதல்' யாருக்கும் தெரியவில்லை. அவன் மனைவிக்கு இது சிறிதும் பிடிப்பதில்லை. இருந்தாலும் சர்வாதிகார நாட்டில் க›ற லுக்கோ, நீதிக்கோ இடமில்லை என்று உணர்ந்து அமைதியாக இருந்துவிட்டாள்.

"ஏ! ராதா! டியூப் பாரு கீழே விழுந்திடிச்சு! வந்து எடு! காலையிலே பழயதெ நெறையச் சாப்பிட்டுட்டேன் போலிருக்கு. குனியவே முடியலே! என்றவன் எடுத்துக் கொடுத்ததும் வெளியே வந்தான். எப்பொழுதுமே கடையில் நான்கைந்து ஆட்களிருப்பார்கள் அன்றைக்கு வானம் 'சைலக்' போல முகாரி பாடியதால் ஒருவரையும் காணோம். யாருமில்லை என்ற துணிவுடன், மெதுவாக புது டியூபை எடுத்துக் கொண்டு உள்ளே வந்தான். மணியைப் பார்த்தான் சரியாக......பன்னிரெண்டு!

"ராதா! சீக்கிரம் சாப்பாட்டை எடுத்துவை! நம்பராஜா வந்திடுவான். பள்ளிக்கூடம் விட்டாச்சு" கூறிவிட்டு, எதையோ எண்ணியவன் வெளியே போய் அங்கிருந்த பழயதையும் உள்ளே கொண்டு வந்து, இரண்டையும் திருப்பித் திருப்பி வேடிக்கைப் பார்த்து, லாப நஷ்ட, வரவு செலவுக் கணக்கு போட்டு, 'ரீ பெயிண்ட்' அடித்த மட்கார்ட் போல புன்னகைத்தான்.

"கொள்ளை! கொள்ளை! பகல் கொள்ளை!" கூக்குரலிட்டுக் கொண்டே ஓடிவந்தான் பொடியன் ஒருவன். ஒரு கிராம் கிரீஸ் விழுங்கியவனுக 'விழுக்'கென்று குதித்தான்.

"என்னடா, ரவி...... என்னடா, கொள்ளை ... கிள்ளைங்கறே......என்னடா சமாசாரம்..."

'பின்னெ, பாருங்கப்பா! யாராச்சும் இந்தமாதிரி அநியாயத்தை செய்வாங்களா?'

'மடக் கழுதை! விசயத்தைச் சீக்கிரமா சொல்ருன்ணு..."

ஒ்ரிந்துகொண்டே இருந்து கண்டுபிடித்து விட்டானே? பழையதையு், புதியதையும் வைத்துக் கொ... யோசித்ததிலிருந்துகண்டு பிடித்திருப்பானே? அவனுக் கெப்பவுமே புத்தி அதிகம், அவன் அம்மா மாதிரி! என்றவாறு சிந்தித்தான்.

"இங்கெப் பாருங்கப்பா! நேத்து தானே எனக்கு மாமா புதுசா பேனு கொண்டாந்து தந்தாங்க? ஏம்பா கவனிக்க மாட்டேங்கறீங்க?" இப்பொழுதுதான் பையன் சொல்லும் செய்தி அப்துல் காதர், தான் நினைத்தது அமாவாசை என்று புரிய ஆரம்பித்தது, "சொல்ரு கண்ணு! அந்தப் பேனுவுக் கென்னடா? காணுமப் போயிடுச்சா?"

"இல்லிங்கப்பா! அந்தப் புதுப் பேனுவை, என் பையிலே வைச்சிட்டு வெளியே தண்ணி குடிக்க வந்தேனு......பக்கத்திலே ஒக்காந்திருக்கான் பாருங்க...ஒரு கொரங்கு ...அவன் பேருகூட ரங்கன்தான்பா ...அவன் வந்து என் பேனுவை எடுத்துகிட்டு, அவன் பேனுவை வெச்சிட்டான்பா! அப்பறம் நான் ஸ்கூல் விட்டதும் பையெ எடுத்துப் பாத்தா...அவன் பேனு......அவன் தான் செஞ்சிருப்பான்னு எனக்குத் தெரியுங்கப்பா!......அவன் ஊளெப் பையன்! எங்க டீச்சர்கூட எவ்வளவோ புத்தி சொல்லியும் அவன் கேட்கலே! அப்பறம்பா......நான் டீச்சர் கிட்டே சொன்னேனு...... அவங்க என் முகத்திலேயே முழிக்காதேன்னு சொல்லிட்டாங்கப்பா!

"ராஸ்கல்! எவ்வளவு தைரியமிருந்தா, புதுப் பேனுவை எடுத்துகிட்டு பழைய பேனுவை வெச்சிருப்பான்! திருட்டுக் கழுதை! இந்த வயசிலே இப்பேர்ப்பட்ட புத்தியா? அவனை ..." ஆத்திரத்தில் பேசியவன் திடீரென நிறுத்திக்கொண்டான். தான் மட்டும் நல்ல காரியமா செஞ்சோம்?... அவன் தான்... சிறிய பையன்......சரியாக விவரம் தெரியாத காரணத்தால் பேனுவை மாற்றிவிட்டான்! நாம்...என எண்ணியவன் உண்மையிலேயே முதல் முறையாக வெட்கப்பட்டான். முழு மனதுடன் பழயதை வீசி எறிந்து விட்டு வெளியே வந்தான், மகிழ்வோடு பெண்ட் எடுத்து முடித்து டியூப், டயர் போட்டுவிட்டான். எண்ணெயில் ஊறியதை எல்லாம் துடைத்துவிட்டு சைக்கிளைப் பூட்டினுன்.

'என்னு, சோமு ஓவராயல் முடிஞ்சுதா? தூசி நிறைய இருந்ததா?"

"ஓவராயல் முடிஞ்சுதுங்க! தூசி பூராவையும் துடைச்சிட்டேங்க, வண்டி சுத்தமா இருக்குதுங்க! எடுத்திட்டுப் போங்க!" என்றவன் அவர் தந்த பணம் எவ்வளவு என்பதைக்கூட கவனியாமல் உள்ளே நுழைந்தான்.

With the best compliments from:

Shantidev General Supply Syndicate,

MADRAS-7.

With the best compliments from:

Ayyappan Industries

TIRUPUR.

மேநாள் இன்றே!

அலைபோன்று ஓயாமல் உழைப்ப தற்கும்
அசையாமல் ஆடாமல் நுகர்வ தற்கும்
நிலையான பிரிவுண்டா மக்கள் தம்மில்?
நீதியிலாப் பழையமுறை மாற்றி விட்டு
நிலைபெருய்ப் புத்துலகம் அமைய வேண்டி
நெறியொன்று காண்போமே மேநா ளின்று!
உலகத்துத் தொழிலாளர் ஒன்ருய்க் கூடி
உரிமைக்கும் குரல்கொடுப்பார் மேநா ளென்றே!

தொழிலமைதி கெட்டதெனச் சொல்லிச் சொல்லி
தொழில்நடத்தும் அரசியலில் 'மாஜிக்' கூட்டம்!
எழிலார்ந்த இளமங்கை தன்னைக் கண்டும்
எழிலில்லை இவள்முகத்தில் என்று சொல்லும்
கிழமங்கை சிலபேரைக் கண்டி ருப்பீர்!
கீழ்க்குணத்தார் பொய்யுரையை மாற்றி வைப்போம்
தொழிலாளர் நலங்காப்போம்! தமிழ நாட்டில்
தொழிலமைதி நிலையாகத் துலங்க வைப்போம்!

சிவ. அம்பிகாபதி.

கதவமைப்போம் வாரீர்!

ஒன்றிரண்டு பெற்றதுதான் போதுமென்றே
உருவாக்கும் கருப்பைக்கோர் கதவுகண்டு
நன்ருற்றும் பணிசெய்ய வாரீர் நாட்டின்
நலன்காப்பீர்! மக்களினப் பெருக்கைமாய்ப்பீர்!
சென்ருெழிந்த அறுபதிலே வாழ்ந்த கூட்டம்!
செழிப்பாகப் பெருகியதைக் கணக்குகாட்டும்!
அன்றிருந்த நிலப்பரப்போ கூடவில்லை!
ஆ! (க்) குவிக்கும் நெற்குவியல் போதவில்லை!

மன்ருடு சிற்சபையின் நாயகன்ருன்
மகவிரண்டில் தற்காத்து வாழ்வமைத்தான்!
குன்ருடு வேல்முருகன் மணவிரெண்டு
கொண்டாலும் கொள்ளவில்லை மகவுஒன்று!
வென்ருடு வேழமுகன் மணமுடிக்க
விரும்பாருய் மரத்தடியில் தனித்திருந்தான்!
பன்றியென உருவெடுத்த வேங்கடத்தான்
பதிசதியாய் வாழுகிருன், குழவியில்லை!

ஆணென்று பெண்ணென்று பெற்றுதூக்கி
ஆசைக்கு மாத்திக்கும் வாரிசாக்கி
தேனொத்த பேரின்ப வாழ்விருப்போர்
திருவிடத்துப் பிறப்பொழிக்கக் கதவமைத்தார்!
ஏனிந்த வாழ்வென்றே நாளை எண்ணி
ஏக்கமுறும் ஏழையரோ ஆண்டுதோறும்
வானத்து விண்மீனும் எண்ண வொண்ணு
வரிசையிலே பிள்ளைகளைப் பெறுகின்ருர்கள்!

குழலாக யாழாக இரண்டுபெற்ருல்
கோடியென வள்ளுவரும் கூறுகின்ருர்!
விழலாகப் பல்குழவி ஈன்றெடுத்து
வெறுப்புற்று வாழ்வழிக்கும் செயலைவிட்டே
அழலாகி அவனியிதை சுட்டெரிக்கும்
ஆட்பெருக்க "சேட்டை" தனை நிறுத்திவைப்போம்
கழலாடு பெண்டிருடன் ஆடவர்க்கும்
கருப்பாதைத் தனைச்சாத்திக் கதவமைப்போம்!

—தமிழமுதன்

உறவாடும் புகழ்க் கன்னி!

எனைத்தழுவ கோடானு கோடி பேர்கள்
எவ்வளவோ முயல்கின்ருர்; அவர்கட் காக
மனமுருகிப் பேசுகிறேன்: "அன்பு மக்காள்!
மண்மிசையில் வாழ்வென்னும் வேடம் போட்டுத்
தினம்வந்தே ஆடுகின்ற பொம்மை நீங்கள்!
தீதென்றும் நன்றென்றும் அறிந்தி டாமல்
நினைப்பதனைச் செயலாக்கத் துடிக்கின் றீர்கள்!
நிமிடத்தில் எனைச்சேர்க்க விழைகின் றீர்கள்!

கள்ளத்தின் வடிவாகி நிற்பார்; அந்தக்
கயவரைநான் ஏறிட்டும் பார்ப்ப தில்லை!
உள்ளளவும் பிறர்பழியே பேசித் தீர்ப்பார்;
உலுத்தரவர் வாசலையும் மதிப்ப தில்லை!
பள்ளத்தைத் தொடர்ந்தபடிச் செல்லும் நீர்போல்
பண்பாளர் தமைநோக்கிச் செல்கின் றேன்நான்!
உள்ளத்தைக் கோயிலெனச் செய்வார் யாரோ
உத்தமராம் அவர்க்கினிமை செய்கின் றேன்நான்!

கல்லினிலே சிலைகாணும் சிற்பி யோடும்,
கண்கவரும் சித்திரங்கள் வரைவா னோடும்,
சொல்லினிலே கவிதையெழில் குழைப்பா னோடும்,
சோதிமிகும் பேரறிவு படைத்தா னோடும்,
நல்லதொரு கொள்கைவளம் வாய்த்தா னோடும்,
நாட்டிற்குத் தனையளிக்கும் வீர னோடும்,
மெல்லியலாள் நான்கலந்து மேன்மை கொள்வேன்;
மீட்டுகின்ற காலத்தின் 'இசை'யாய் வாழ்வேன்!"

—நிலவு சேகரன்.

அதுதான் காரணம்!

என்னேடி எக்களிப்புக் கொள்ளு கின்ருய்?
எதனலே இன்பத்துள் துள்ளு கின்ருய்?
என்னேடி துரிதநடை! என்று மில்லா
எழில்முகத்துத் தாமரையும் பூத்த தேனே!
என்னேடி புன்சிரிப்பு! இன்று மட்டும்
இறுமாப்பும் ஏனுனக்கு? இயம்பா விட்டால்
முன்னேடி வந்துன்னை முடக்கிப் போடும்
முயற்சியிலே எனைத்தள்ளிக்கொள்வேன்! என்ருன்

என்னத்தான் ஏதொன்றும் அறியார் போலே
ஏதேதோ புலம்புகிறீர்! இந்த நாட்டின்
கண்ணொத்த மக்கள்தம் வாழ்வை நாளும்
கவலைக்குள் ளாழ்த்திட்ட காங்கி ரஸ்தான்
மண்மூடிப் போயிற்றே! அறியீ ரோநீர்?
மாமேதை! பேரறிஞர்! அண்ணு தந்த
பொன்னொத்த பாதையிலே நகர ஆட்சி
பூத்துளதே! மகிழ்கின்றேன் அதனல்! என்ருள்.

—ராசேசுவரி முத்துராமன்.

அன்புள்ள நண்பா!

சென்ற கிழமை இறுதியில் தமிழகத்துக்கு வடக்கே—பரீதாபாத்தில் காங்கிரசுக் கட்சியின் மகாசபை(!) கூடி இருக்கிறது. சோஷலிச சித்தாந்தம் பற்றியும், அதன் செயல்முறை பற்றியும் காரசாரமாக விவாதம் கூட நடைபெற்றிருக்கிறது. சோஷலிசத் திட்டத்தை விரைவாகச் செயல்படுத்தவில்லையென்று ஒரு சாராரும், சோஷலிசத் திட்டமே செயலாகவில்லையென்று இன்னொரு தரப்பாரும், இன்னின்ன துறையில் சோஷலிச முறை முழுமையாகப் புகுத்தப்பட வேண்டும் என்று இன்னோர் குழுவினரும்—கூடாது; முடியாது—புகுத்தவிடமாட்டோம் என்று மற்றோர் சார்பினரும் சிம்மக்குரலில் கர்ஜனை புரிந்திருக்கிறார்கள்.

எல்லா தரப்பினரையும் அமரவைத்து, அனைவருக்கும் தலைமையேற்று, தலைமையுரை நிகழ்த்தியிருக்கிறார் காங்கிரசுத் தலைவர் நிஜலிங்கப்பா. திரு. நிஜலிங்கப்பாவின் உரைத் தொடக்கமே, எடுத்த எடுப்பில் காங்கிரசுக் கட்சியினைக் காய்ந்துகொள்ளும் முறையில் அமைந்துவிட்டிருக்கிறது.

பரீதாபாத் மாநாடு பற்றி நமக்குக் கவலையெதுவுமில்லை—என்றாலும், பல மாநிலங்களிலும், மத்தியிலும் இன்னமும் காங்கிரசுக் கட்சியே ஆட்சி அதிகாரம் பெற்றிருப்பதால், நாம் அதுபற்றிக் கவலைப்பட்டுத் தீர வேண்டிய நிலையினை, தானாகவே பெற்றுவிடுகிறோம் நண்பா!

தலைமையேற்று உரையாற்றிய தலைவர், தம் உரையின்போது, எதிர்காலம் பற்றித் தம் கட்சியினருக்கும், கட்சியின் மேலிடத்தவருக்கும் சிலபல அச்சுறுத்தல்களை உண்டாக்கி விட்டிருக்கிறார். அச்சுறுத்தல் என்பது இங்கே, காங்கிரசுக்காரர்களுக்கே ஒழிய நாட்டு மக்களுக்கு அல்ல என்ற தெளிவோடு, அந்த அச்சுறுத்தல் பற்றிக் கணிக்க முற்பட்டால், ஒரு பக்கம் பரிதாப உணர்ச்சி மேலிடுகிறது! இன்னொரு பக்கம் சிரிப்பும் வருகிறது!

> 1972ல் காங்கிரசுக்கட்சி தோற்றுப் போகுமானால்—
>
> இந்தியாவில் நிலையானதொரு அமைதி இராது. ஆட்சி இராது.

என்பது காங்கிரசுத் தலைவர் காங்கிரஸ் மாநாட்டில் அச்சுறுத்தும் முறையிலே எடுத்துக்காட்டியிருக்கும் ஒரு செய்தி.

1972ல் காங்கிரசுக் கட்சி, தோற்றுப் போகும் என்ற எண்ணம் ஏற்பட்ட பின்புதானே நண்பா, அப்படி அது தோற்றுப் போனால், அதன் விளைவுகள் எப்படிப்பட்டதா யிருக்கும் என்ற ரீதியில் சிந்தனை செயல்பட முடியும்.

முதலில் காங்கிரசுத் தலைவருக்கு 1972ல் காங்கிரஸ் கட்சி தோற்றுவிடும் என்ற எண்ணம் ஏற்பட்டு விட்டிருக்கிறது. இந்த எண்ணமே, அதன் விளைவுகளை ஈன்றெடுத்துத் தந்திருக்கிறது, முதலில் நிஜலிங்கப்பாவுக்கு அச்சம் ஏற்பட்டிருக்கிறது அந்த அச்சத்தை மகாசபை முன்னிலையிலே வெளிப்படுத்திக் காட்டியிருக்கிறார் என்பதுதானே உண்மையாக விருக்க முடியும்?

இரண்டு மூன்று திங்களுக்கு முன்பு, தமிழகக் காங்கிரசின் தலைவர்கூட, இதே கருத்தைதான் எடுத்துக் காட்டியிருக்கிறார். அதாவது "1972ல் மத்தியில் பலமான ஆட்சி அமைவது சந்தேகம்" என்று. ஏறத்தாழ இரண்டுக்கும் ஒரே பொருள்தான். அதாவது "1972ல் காங்கிரசுக் கட்சி வெற்றி பெறப் போவதில்லை" என்று அனைத்திந்தியத் தலைவரும், மாநிலத் தலைவரும் ஒருமனதான முடிவுக்கு வந்திருக்கிறார்கள்!

காங்கிரசுக் கட்சி, தோற்றுப் போகுமானால், இந்தியாவில் நிலையான அமைதி இராது என்று காங்கிரசுத் தலைவர் கருதுவதை, நாம் உணருகிற முறைப்படி, அமைதியாக விருக்க விடமாட்டோம் என்பதுதான் பொருள் என்பதனை புலப்படுத்திக் காட்டித் தானேயாக வேண்டும். அதுவல்லாமல், அதிலே மறைந்து கிடக்கிற மற்றொரு நிலையினையும் நாம் உணர்ந்து கொள்கிறபோது இரட்டை மகிழ்ச்சியடைய முடியும். மனதுக்குள் மகிழ்வதற்குக்கூட நாம் காங்கிரசு ஆட்சியிடம் உரிமை கேட்டுக் கொண்டிருக்கத் தேவையில்லை. அது நம் பிறப்புரிமை!

1972ல் காங்கிரஸ் தோற்றுப் போகும் என்று வடக்கேயிருந்து குரல் கொடுத்துக் கொண்டிருக்கிற அதே நேரத்தில் தமிழகக் காங்கிரசுத் தலைவர்களது நிலைமையினைக் கொஞ்சம் படம் போட்டுப் பார்த்தால், நண்பா, அந்த மகிழ்ச்சி உனக்குக் கிடைக்கும்.

திரைப் படத் தயாரிப்பில், இயக்குநர் பொறுப்பேற்கும் ஒருவர், கதாசிரியரை அல்லது உரையாடல் எழுதியிருப்பவரை அருகமர்த்திக் கொண்டு, அல்லது அவரது கருத்துரைகளைக் கேட்டுத் தெரிந்துகொண்டு தாம் இயக்கவிருக்கும் படத்தின் கதைக்கு ஒவ்வொரு

காட்சிக்கும் ஒரு படம் வரைந்து கொள்வாராம்! படம் என்றால் நண்பா—தூரிகை யெடுத்து, வண்ணத்தில் தோய்த்து திரைச்சீலையில் எழுதுவது என்பதல்ல—ஒவ்வொரு காட்சியினையும் பல துண்டுகளாக்கி, பல துண்டுகளிலும் பல கோணங்களை உருவாக்கிக்கொண்டு ஒவ்வொரு கோணத்திலும் அந்தக் காட்சித் துணுக்கு எப்படி எப்படி இருக்கவேண்டும் என்பதற்குக் குறிப்புக்கள் சில போட்டுக் கொள்வதோடு, அவ்வாறு கொண்ட குறிப்புக்களோடு மனதிலும் அதனைக் காட்சி வடிவாக்கிக் காண்பாராம்!

இதுபோல்தான் நண்பா, தென்னகக் காட்சியொன்றைப் படம் போட்டுப் பார்த்தால் மகிழ்ச்சி பிறக்கும் என்றேன்.

பரீதாபாத் மாநாட்டு மேடையில் தலைவர் இடத்திலே நின்று உரையாற்றிக் கொண்டிருக்கிறார் நிஜலிங்கப்பா—அருகே இந்தியப் பிரதமரும், துணைப் பிரதமரும் திண்டுகளில் சாய்ந்தபடியே கவலை ரேகைகள் முகத்தில் படிய பஞ்சு மெத்தைகளில் அமர்ந்திருக்கிறார்கள்.

இன்னும் சில அமைச்சர்கள் பிரச்னைகளை விட்டு வெளியே வந்து, வாய்க்குக் கிடைத்த அவலை மென்று, ஒருவரோடொருவர் பேசிச் சிரித்து வேறோர் உலகில் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழகப் பிரதிநிதிகள் காமராசரும், சுப்பிரமணியமும், மருத்துவ மனையிலே இருந்தபடியே பக்தவத்சலனாரும் தமிழகத்தில் நடந்து முடிந்த நகராட்சித் தேர்தலின் மீது நினைவை ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

அதே நேரம் 1942ல் தடியடிபட்டு சிறைவாசமேற்று, இளமையினை யெல்லாம் பொதுத்தொண்டு பொதுத்தொண்டு என்றே கழித்துவிட்டு 1969ல் நரைதிரை விழுந்து தொங்கும் தோளினராய், துவண்ட நிலையினராய் காட்சிதரும் 'காந்திக்குல்லாய்' அணிந்த காங்கிரசுக்காரர் ஒருவர்—

சென்னை 'ரவுண்டானா' அருகில் கம்பீரமாக நின்று கழகத்துக்குக் கட்டளையிட்டுக் கொண்டிருக்கிற பேரறிஞர் அண்ணா அவர்களது உருவச்சிலைக்கு முன்னால் நின்றுகொண்டு—

"பேரறிஞர் அவர்களே! தென்னகத்துக் காந்தியே! எங்களை மன்னித்து விடுங்கள்! பெரியவர் நீங்கள்! மாமேதை நீங்கள்! உலகத்தலைவர்களுக்கெல்லாம் ஒரு தத்துவம் நீங்கள்! உங்கள் ஒவ்வொரு உரைக்கும் நாங்கள் மறுத்துரைத்து வந்திருக்கிறோம்! உங்களது ஒவ்வொரு செயலையும் கேலியும் கிண்டலும் செய்து வந்திருக்கிறோம் நாங்கள்! ஏன்? எங்கள் அறிவுக்கண் குருடாகி இருந்ததாலா? இல்லை அறிஞரே! இல்லை! எல்லோரையும் போலவே எங்களுக்கும் அறிவு உண்டு! ஒன்றைச் சிந்தித்துப் பார்க்கும் திறமையுண்டு! என்றாலும் மன்னா! மன்னித்துவிடுங்கள்—நாங்கள் தவறான தலைமையின் கீழ் சென்று வந்தோம்! கீழான கட்டளைகளுக்கெல்லாம் நாங்கள் தோள் கொடுத்தோம்! மூர்க்கத்தனமானதும் முட்டாள்தனமானதுமான போராட்டங்களுக்கெல்லாம் எங்களை ஈடு கொடுத்தோம்! ஏன்? காங்கிரஸ் என்ற கட்சியின் கொள்கைக்காக அதனைக் காத்துத் தீரவேண்டும் என்ற கடமைக்காக! கண்டதென்ன! அதோ பாருங்களேன்! யார் யாரோ காங்கிரசுக்காரர்கள் என்ற போர்வையிலே எங்கள் தியாகத்தையும் நேர்மையையும் இழித்துப் பழித்துப் பேசுகிறார்கள்!

பேரறிஞர் அவர்களே! நேருவின் காலத்திலேயே திராவிட நாட்டைப் பிரித்துவிட வேண்டும என்ற நல்ல நோக்கத்தோடு கூடிய உங்கள் தூய பிரசாரத்தை, நாங்கள் எந்தெந்த முறையிலெல்லாம் எதிர்த்தோம்! எத்தனை எத்தனை இன்னல்களை எல்லாம் உங்கட்குத் தந்தோம்!

தென்னக மக்களின் தேவனே! நேருவின் காலத்துக்குள்ளேயே நீங்கள் திராவிடத்தைப் பிரித்துக் கொண்டிருந்தால், இன்றைக்கு எங்கட்கு இந்த இழிவு யேற்பட்டிருக்குமா? கலங்கித் தவிக்கும் நிலை உண்டாகியிருக்குமா!

பாவிகள் நாங்கள்! அதனையும் தடுத்தோம்! தங்கள் ஒருவருக்காகவே பிரிவினைத் தடுப்புச் சட்டத்தை நிறைவேற்ற ஆக்கமும் ஊக்கமும் தந்தோம்! அற்ப மகிழ்ச்சியில் அன்று ஆனந்தமடைந்தோம்! அறிவிழந்துபோனோம்! அனுபவிக்கிறோம் இன்று!

தொழுநோய் பிடித்தவனின் அங்கங்கள் கொஞ்சங் கொஞ்சமாக அழுகிக் கறைந்து குறைதல் போலே காங்கிரசுக் கட்சியின் இன்றைய நிலையை யெண்ணி அழுகின்றோம்! அழுதாலும் தீரவில்லையே எங்கள் தலைவா!

தலைவரே! நீங்கள் அன்றே திராவிடத்தைப் பெற்றிருந்தால், நாங்களும் அன்றே உங்களோடு ஐக்யப் பட்டிருப்போமே! இந்த நிலை வந்திருக்குமா? தடுத்தவரும் நாங்களே! அதன் பலனை அனுபவிப்பவரும் நாங்களே!

எவ்வளவு ஆணவம் படைத்தோராய் நாங்கள் இறுமாந்து இருந்துவந்திருக்கிறோம் என்பது இப்போதல்லவா புரிகிறது!

1967லேயே எங்களுக்குப் புகட்டிய பாடத்தை நாங்கள் உணர மறுத்தோம்! அடுத்தடுத்து நடைபெற்ற இடைத் தேர்தல்கள் மூலம் கூட பெறவேண்டிய பாடத்தைப்பெற மறுத்தோம்!

அவசரப்படும்போதும் ஆத்திரப்படும்போதும் அறிவு மங்கிவிடும் என்பார்கள்! ஐயோபாவம்! என்ற அனுதாபத்தின்பேரில் நாகர்கோயில் வெற்றிதந்த மக்களைக்கூடப் பாராட்டத்தவறினோம்! மமதைகொண்டோம்!

பாண்டிச்சேரி மாநில நகராட்சித் தேர்தலிலாவது படிப்பினைபெற்றோமா? புதுவை பொதுத் தேர்தலிலாவது புத்திவந்ததா?

தகுதியற்ற நிர்வாகம்!

கொள்கைகளை மாற்றுவதானால் அதற்குத் தகுதியான நிர்வாகிகள் கிடைப்பது ஒரு முக்கிய அம்சமாகிறது. சில நாடுகளில் இப்படி நடப்பதில்லை. இந்தியாவில் இம்மாதிரி இருப்பதற்கு அரசைத்தான் குறைசொல்ல வேண்டும். தம்மிடம் உள்ள நிர்வாக அமைப்பு நம்முடைய கொள்கைகளை நிறைவேற்றுவதற்குத் தகுதியானதாக இல்லை!"

—தலைமையமைச்சர் இந்திரா

இல்லை — ஆண்டவனே! புத்திவரவில்லை!! எங்கள் அறிவுக் கண்களை தவருன தலைமை பறித்துக்கொண்டுவிட்டது! ஆணவம் அபகரித்துக் கொண்டுவிட்டது!

காதில் விழுகிறதா வேந்தே! பரீதாபாத் மாநாட்டுப் பேச்சு! தலைவர் பேசுகிருர். 1972ல் காங்கிரஸ் தோற்ருல்?...என்று அவர் கேள்விக்குறி போடுவது உங்கள் காதில் விழுகிறதா?

காங்கிரஸ் தோற்றது தமிழகத்தில் மட்டுமா? 9 மாநிலங்களில் 1967ல் தோற்றபோதுகூட இந்தத் தெளிவு பிறக்கவில்லையே!

அடுத்தடுத்து இடைத் தேர்தல்களில் காங்கிரஸ் தோற்றபோதுகூட அறிவு 'முளைக்க' வில்லையே!

காங்கிரஸ் கட்சி முழுகிக்கொண்டிருக்கும் கலமாக இருக்கிறது என்று காங்கிரசுத் தலைமையிலேயுள்ளவர்களே சொல்லுகின்ற அளவு பொது ஞானம் பிறந்திருக்கிறதாமே!

இந்தக் குற்றச்சாட்டுக்கூட ஒருவரை ஒருவர் விழுங்க எடுத்துக்கொண்டுள்ள முயற்சியின் பிரதிபலிப்பல்லவா அறிஞரேறே!

இதோ! என் கண்ணுக்கு முன்னலேயே இந்த அக்கிரமம் நடைபெற்று விட்டிருக்கிறது!

"மாநகராட்சியினைப் பிடித்ததன் மூலம்தான் தி. மு. க. ஆட்சியைக் கைப்பற்ற முடிந்தது; அதுபோல் நகராட்சிகளைக் கைப்பற்றுவதின் மூலம் 1972ல் காங்கிரஸ் மீண்டும் ஆட்சிக்கு வரும்"

என்று எங்கள் சுப்பிரமணியம் பேசி ஒரு கிழமை கூட மறையவில்லையே!

மறைவதைக் காண்கிறேனே! காங்கிரசின் மடமை மறைகிறதா? ஆணவம மறைகிறதா? அகந்தை மறைகிறதா? அலட்சியம் மறைகிறதா? அறிகிலேனே! சரிகிறதே சடசடவென!

ஒன்றிரண்டா! ஒன்பதா? பத்தா! அடேயப்பா! ஏழெட்டு நகரங்களில் இருந்தவர்கள் நீங்கள்! தனிப பெரும்பான்மையோடு 19 நகராட்சிகளைக் கைப்பற்றி இருக்கிறீர்களே! கூட்டணியின் தலைமையில் மொத்தம 57 நகராட்சிகளைப் பிடித்து விட்டீர்களே!

வளர்கிறது! வளர்கிறது!! என்றேம்! இல்லை, தேய்கிறது, தேய்கிறது என்றீர்கள்! எப்போதுமே உண்மை உங்கள் பககத்தில்தான் இருந்து வந்திருக்கிறது என்பது இப்போதலலவா புரிகிறது!

வளர்கிறது! வளர்கிறது! என்றது கழகத்தைப் பார்த்துத்தானே! தேய்கிறது! தேய்கறது என்றது காங்கரசைப் பார்த்துத்தானே!

அழகான ஒரு வேறுபாடு இயற்கையிலேயே அமைந்திருக்கிறது ஐயனே! நீங்கள் ஏழு நகராட்சிகளைத்தான கடந்த முறை பெற்றிருந்தீர்கள். அறிஞர் பெருமானே! அதே ஏழினை இந்த முறை எங்கட்குத் தந்துவிட்டிருக்கிருர்கள் மக்கள்! இனனுமொரு உவமை! நாங்கள் சட்டமனறத்தில் 139 பேர்தான் கடைசியாக இருந்தோம்! அதே 139 பேர்தான் நீங்களும் இருக்கிறீர்கள்!

எங்களிடமிருந்த நல்ல தன்மைகள் எல்லாம்

★★★★★★★★★★★★★★★★★★★★★

1972-எப்படி இருக்கும்?

கடந்த 24, 26—4—69 ஆகிய இருநாட்களில் நடைபெற்று முடிந்த 73 நகரசபைகளுக்கான தேர்தலில் 57 நகரசபைகளைக் கூட்டணிக் கட்சிகள் கைப்பற்றி இருக்கிறது. 19 நகராட்சிகளில் கழகமே தனிப் பெரும்பான்மை பெற்றிருக்கிறது.

செங்கற்பட்டு மாவட்டம்:
- காஞ்சிபுரம்
- திருவொற்றியூர்
- செங்கல்பட்டு
- ஆலந்தூர்
- திருவள்ளூர்
- தாம்பரம்

வடஆற்காடு மாவட்டம்:
- வேலூர்
- ஆம்பூர்
- ஆற்காடு
- அரக்கோணம்
- வாலாஜாபேட்டை
- திருப்பத்தூர்
- ராணிப்பேட்டை
- ஆரணி
- குடியாத்தம்

தென் ஆற்காடு மாவட்டம்:
- கடலூர்
- சிதம்பரம்
- விழுப்புரம்
- பண்ருட்டி
- நெல்லிகுப்பம்
- திண்டிவனம்

தர்மபுரி மாவட்டம்:
- கிருஷ்ணகிரி
- தர்மபுரி

சேலம் மாவட்டம்:
- ராசிபுரம்
- திருச்செங்கோடு
- சேலம்

கோவை மாவட்டம்:
- தாராபுரம்
- பொள்ளாச்சி
- மேட்டுப்பாளையம்
- உடுமலைப்பேட்டை

நீலகிரி மாவட்டம்:
- குன்னூர்
- ஊட்டி

மதுரை மாவட்டம்:
- போடிநாயக்கனூர்
- பழனி
- மதுரை

திருச்சி மாவட்டம்:
- புதுக்கோட்டை
- மணப்பாறை

தஞ்சை மாவட்டம்:
- தஞ்சாவூர்
- பட்டுக்கோட்டை
- திருவாரூர்

ராமநாதபுரம் மாவட்டம்:
- ராமநாதபுரம்
- ஸ்ரீவில்லிபுத்தூர்
- தேவக்கோட்டை
- காரைக்குடி
- பரமக்குடி

நெல்லை மாவட்டம்:
- திருநெல்வேலி
- தூத்துக்குடி
- பாளையங்கோட்டை
- சங்கரன்கோவில்
- கோவில்பட்டி
- தென்காசி
- செங்கோட்டை
- புளியங்குடி
- மேலப்பாளையம்
- கடையநல்லூர்

கன்னியாகுமரி மாவட்டம்:
- நாகர்கோவில்

இந்த முடிவுகளைக்கொண்டு 1972 எப்படி இருக்கும் என்று கணித்துக்கொண்டால், ஐயோ! காங்கிரசே! என்று ஒரு இரங்கற்பாவை இப்போதே எழுதிக்கொள்ளலாம்.

★★★★★★★★★★★★★★★★★★★★★

உங்கள் கழகத்தில் குடிகொண்டிருக்கக் காண்கிறேம்! எங்களிடம் தீமைகள் மட்டுமே எஞ்சியிருப்பதனையும் இப்போது உணர்கிறேம்!

"எல்லாருமே தன் கடமைகளைப்பற்றிக் கவலைப் படாமல், உரிமைகளுக்காகவே போராடுவதென்ருல் ஒரே குழப்பமும் கலவரமுமாகத்தான் இருக்கும்"—

என்ருரே காந்தியடிகள்! உண்மையை உணர்ந்த தனுல்தானே தேவே! நீங்கள் கடமை! கடமை! கடமை!! என்றே காரியமாற்றினீர்கள்! உரிமைகளின்மீது மட்டுமே உரத்தக்குரல் எழுப்பி வந்ததால் மட்டும்தானே நாங்கள் ஒதுக்கப்பட்டுப் போனோம்.

''தனக்குக் கிடைக்கும்குறைந்த அளவுஅதிகாரத்தைக்கூட சந்தர்ப்பம் கிடைக்கிறபோதெல்லாம் அதிக அளவு பயன்படுத்த நினைக்கும் மனிதன், தன்னிடம் உள்ள மிகுந்த அறிவை, குறைந்த அளவுகூட பயன்படுத்த முனைவதில்லை'' என்ருன் ஓர் மேனுட்டு மேதை! மிகுந்த அறிவைப் பெற்றிருக்கும் மனிதன், குறைந்த அதிகாரத்துக்காகத் தொடுத்திருக்கிருரே போர்! இதென்ன கேவலம்!

செயலை விதையுங்கள் — பழக்கம் உருவாகும்; பழக்கத்தை விதையுங்கள் — குணம் உருவாகும்; குணத்தை விதையுங்கள்—எதிர்காலம் உருவாகும் என்ருனே போர்டுவான். எதிர்காலத்தை, அதோ—பரீதாபாத்திலிருந்து எடுத்துக்காட்டுகிருர்களே! 1972ல் காங்கிரஸ் தோற்ருல்? - என்ற வினுமூலம்! அறிஞர்க்கு அறிஞரே! அதிகம் பேசிவிட்டேன்! கவலையுடன் அங்கே காமராசரும், கண்ணீருடன் சுப்பிரமணியமும் வீற்றிருப்பது தெரிகிறது! வருந்துகிறேன்! வேறென்ன செய்ய! தன் வினை, தன்னைச் சுடுவதைத் தடுக்க யாரால் முடியும்?

குணத்தையும், நல்ல பழக்க வழக்கங்களையும் விதைக்கத் தவறியதால் வந்த விளைவுகளின் அறுவடைகள்தான் இவையென்பதை உணர்கிறேன்! அதனுல் உங்கள் பொன்னடிகளிலே நின்று புலம்புகிறேன்! நகராட்சிகளின் எண்ணிக்கைக் கேட்டு எனக்குத் தலை சுற்றுகிறது! உங்கள் நிழலிலே நிற்கிறேன்! பெருமிதம் ஏற்படுகிறது!

எல்லாருமே நீங்களாக இருக்கக்கூடாதா? ஓ! அது எப்படி முடியும்! எல்லாருமே நீங்களாக விருந்துவிட்டால், அப்புறம் உங்கட்கு ஏது பெருமை!

மனந்திறந்து பேசிவிட்டேன்! அடுத்து என்ன நிகழும் என்பதை அறியாமல் பேசிவிட்டேன்...''

என்று பேசிக்கொண்டே கீழே சாய்கிருர்! வானம் கருக்கிடுகிறது! கருமேகங்கள் சூழ்ந்து கொள்கின்றன.

இவ்வளவுதான் நண்பா! நீ படம் போட்டுப் பார்த்துக்கொள்ளவேண்டிய காட்சி! உன் விருப்பப்படியெல்லாம் படம் பிடிக்கும் காமராவை எந்தக் கோணத்திலே வேண்டுமானுலும் வைத்துப் பிடித்துக்கொள்ளலாம்! குளோசப் காட்சியாயினும் சரி, தூர—நடுத்தரத் தூர காட்சியாயினும், அனைத்தும் கலந்ததாயினும் திறமைக்கேற்றபடி, ஜூம்வைத்துக்கூடபடம் பிடித்துக்கொள்ளலாம்!

ஆனுல் மனதிலே பதியவேண்டியது காட்சி மட்டுமேயல்ல! காட்சி ஜோடனைகள் அனைத்தும் கண்ணுக்கு விருந்தளிப்பதற்கு மட்டும்தான்! கருத்து ஜோடனைகள் நமக்குத் தேவை!

பரீதாபாத்திலே நிஜலிங்கப்பா, 'காங்கிரசுக்கட்சி தோற்கும்' என்று கூறிக்கொண்டிருக்கிற அதேநாளில், அதே வேளையிலேயே தமிழகத்தில், நகராட்சித் தேர்தல்களிலே சடெசடென காங்கிரஸ் சரிவதனைக்காண வேண்டும்—காட்டவேண்டும்! அவ்வளவுதான்!

பேரறிஞர் அண்ணுவின் திருவடியின் கீழ்நின்று காங்கிரசுக்காரர் ஒருவரே காரணங்களைக் காட்டிவிட்டார்! அந்தக் காரணங்கள் அனைத்தும் மனிதர்கள் அனைவருக்கும் பொதுமையானவை! அந்த மனிதர்கள் காங்கிரசிலும் இருக்கலாம்! கழகத்திலும் இருக்கலாம்! கண்டறிந்து களைந்து, கடமையினை மட்டும் ஆற்ற வேண்டும்! கடமையினை ஆற்றி முடித்துவிட்டு, உரிமைக்காகக் குரல் கொடுக்கவேண்டும். உரிமைக் குரல் மட்டுமே ஓங்கி நிற்குமானுல், காந்தியடிகள் கூறுவது போல் போராட்டம்தான் எஞ்சி நிற்கும்!

காங்கிரஸ் தலைவரின் பேச்சு, 1972ல் நாம் எப்படியிருப்போம் என்பதற்கு ஒரு எடுத்துக் காட்டு! அதனை உண்மைதான் என்று நிரூபித்துக் காட்டுவன நகராட்சித் தேர்தல் முடிவுகள்!

காலத்தையே மாற்றிக் காட்டுபவன் தொண்டன்! அந்தத் தொண்டு கழகத்தையே ஆளும் பீடத்தில் அமர்த்தி இருக்கிறது!

நகராட்சிகளை யெல்லாம் கழகக் காவலர்களின் கரத்திலே கொண்டுவந்து சேர்ப்பித்திருக்கிறது.

நண்பா! அனைத்துக்கும் நீயும், உன்னைப் போன்றவர்களும்தான் காரணம் என்பதை யாராலாவது மறைக்க அல்லது மறுக்க முடியுமா? முடியாது! அந்த நிலைமை நீடித்துக்கொண்டிருக்கிற வரையிலே கவலையில்லை! பேரறிஞர் அண்ணு அவர்களது ஆன்மா சாந்தியடையும்! சாந்தியடையச் செய்ய வேண்டுவது நம் பொறுப்பு. ஏனென்ருல் எனக்கும் உனக்கும் இந்த ஆற்றலினைத் தந்தவர் அவரே அன்ருே!

அந்த உண்மை, நம் அனைவரது உள்ளத்தையும் விட்டு அகலாத வரைக்கும்; நிஜலிங்கப்பா மட்டும் அல்ல—நேருவின் மகளாராலும், வேறு எவரினுலும் காங்கிரசின் அழிவைத் தடுத்து நிறுத்திவிட முடியாது!

அந்த உண்மை, எங்கே இருக்கிறது என்பதைக் கண்டறிந்து செயல்படுவோர் நாம்! கண்டறிய வேண்டியவர்கள் காங்கிரசுக்காரர்கள்! இல்லையா நண்பா!

அன்புள்ள,

திருவாரூர் முத்துராமன்

ஆசிரியர், வெளியிடுபவர் சி.என்.ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3, 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.